# பதுக்கல், கொள்ளைலாபத்தைதடுக்க பொலிசார் உஷார்

Registered as a Newspaper in Ceylon * விலை. சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர். 9
இதழ் 357
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க கார்த்திகை] 10 ஷஃபான் 23 ஞாயிற்றுக்கிழமை [26-11-67

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்று நள்ளிரவு முதல் மாவு, சீனி ஆகியவற்றிற்கு விலையுயர்த்தப்பட்டதிலிருந்து கடைகளைத் திடீர் சோதனையிட, வடபகுதிப் பொலிசார் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்கக் கூடுதலான விலைக்குப் பொருள்களை விற்பவர்களையும், பொருட்களை வைத்துக்கொண்டு விற்பனை செய்ய மறுப்பவர்களையும் உடன் கண்டுபிடிக்குமாறும் கடைகளைத் திடீர் சோதனையிடுமாறும் வடபகுதியில் உள்ள சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்றுக்காலை உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாண நகரில் வர்த்தக ஸ்தாபனங்களைத் திடீர் சோதனையிட பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள் இராசையா, சிறிவர்த்தன ஆகியோரைத் தலைமையாகக் கொண்ட விசேஷ பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (ந. நி.)

# பஸ்கட்டணம்திடீரென உயராது

## அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, சனி

பஸ் பிரயாணக்கட்டணம் திடீரென உயர்த்தப்பட மாட்டாது. தேசியமய சேவைகள் அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசாவும் அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. எம். ராஜேந்திராவும் இதைத்தெரிவித்திருக்கின்றனர்.

இலங்கை ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து பெட்ரோலின் விலை அதிகரித்திருப்பதால் பஸ் கட்டணமும் உயருமென எதிர்பார்க்கப்பட்டது.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு நஷ்டம் ஏற்பட்ட போதிலும்கூட பஸ் கட்டணத்தை திடீரென உயர்த்தமுடியாது என்று திரு. ராஜேந்திரா தெரிவித்தார்.

பஸ் கட்டணத்தைஉயர்த்துவதென்றாலும் சரி குறைப்பதென்றாலும்சரி கட்டணம் பற்றி புனராலோசனை செய்வதற்கு ஒருசபை நியமிக்கப்படவேண்டுமென்றும் அந்தச்சபை செய்யும் முடிவைப்பொறுத்தே கட்டணம் பற்றித் தீர்மானிக்க முடியுமென்றும் திரு. ராஜேந்திரா கூறினர். பஸ் கட்டணத்தை உயர்த்துவது பற்றி உடனடியாக முடிவுசெய்யும் உரிமை இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு இல்லை என்றும் அவர் சொன்னர்.

ஆனல் பெட்ரோல், எரிபொருள் விலை உயர்வு காரணமாக பஸ் கட்டணத்தை உயர்த்துவது பற்றி பரிசீலனை செய்ய ஒரு சபையை நியமிப்பது பற்றி அரசாங்கம் ஆலோசிக்கக் கூடுமெனத் தெரிகிறது.

---

## இறக்குமதியில் மேலும் ‘வெட்டு’?

கொழும்பு, சனி

ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து அதனல் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சமாளிப்பதற்காக இறக்குமதிக் கோட்டாக்களில் மேலும் ‘வெட்டு’ ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்துவருவதாகத் தெரிகிறது. விரைவில் ‘கோட்டா’ குறைக்கப்படுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படக் கூடுமென அறியப்படுகிறது.

அத்தியாவசியமான பொருள்களைத் தவிர இதர பொருள்களின் இறக்குமதி பெருமளவில் கட்டுப்படுத்தப்படக்கூடுமெனத் தெரிகிறது.

இறக்குமதியைக் குறைப்பது பற்றியும் ஏற்றுமதியை அதிகரிப்பது பற்றியும் அரசாங்கம் தீவிரமாக ஆலோசனை செய்துவருகிறது.

## மாவு, சீனி விலை உயர்வு; இருப்புக் கணக்கெடுப்பு

யாழ்ப்பாணம், சனி

மாவுக்கும் சீனிக்கும் ரூத்தலுக்கு ஐந்து சதம் விலை உயர்த்தப்பட்டுள்ளது. மாவுக்கு விலைஉயர்த்தப்பட்டதால் 1 ரூத்தல் பாணுக்கு 5 சதமும், 1/2 ரூத்தல் பாணுக்கு 3 சதமும் விலை உயர்த்தப்பட்டுள்ளது. இத்தகவலை உணவுக் கட்டுப்பாட்டிலாகா அறிவித்துள்ளது.

இதுபற்றி வடபகுதிஉணவுக் கட்டுப்பாட்டிலாகாவுக்கு பிரதம உணவுக்கட்டுப்பாட்டிலாக அதிகாரி அனுப்பிய அவசரத்தந்தியில், 150 ரூத்தல் மாவுள்ள மூடை 7-40 சதமும், 100 ரூத்தல் மாவுள்ள சீனி5-52 சதமும் விலையுயர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இது இம்மாதம் 23-ம் திகதி நள்ளிரவிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதெனவும் மேலும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்துசகல கூட்டுறவுச் சங்கங்களிலும் உத்தரவுபெற்ற வர்த்தக ஸ்தாபனங்களிலும் உணவுப் பொருட்களின் பூரண இருப்பையும் உடன் கணக்கெடுக்குமாறு உணவுக்கட்டுப்பாட்டிலாகா உத்தரவிட்டுள்ளது. இதனல்நேற்று நண்பகலிலிருந்துசகல ஸ்தாபனங்களிலும் வெகு துரிதமாக கணக்கெடுப்பு நடைபெற்றுவருகின்றது. ‘பெர்மிட்’ மூலம்உணவுப்பொருட்கள் விநியோகம் செய்தல் அடுத்தமாதம் முதலாம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந. நி.)

## மேலதிக தறிகள்

பண்டத்தரிப்பு, சனி

இளவாலை சென். ஜேம்ஸ் நெசவு நிலைய ஆசிரியை மேற்படி நிலைய மாணவிகள் சங்க ஆதரவுடன் மூன்று மேலதிக தறிகளை நெசவு நிலையத்துக்கு பெற்றுக் கொடுத்திருக்கிருர்.

எதிர் வரும் தை மாதம் 2ம் திகதி மேற்படி நிலையத்தின் 1ம் ஆண்டு விழாவையும் கொண்டாட நிலையத்தினர் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளனர்.

# மேற்கு ஜெர்மன் உதவி அதிகரிக்கவாய்ப்பு

## கண்டியிலும் தொடர்ந்து பேர்ச்சுவார்த்தை

கொழும்பு, சனி

இலங்கைக்கு விஜயஞ் செய்துள்ள மேற்கு ஜெர்மன் அதிபர் டாக்டர் கெயிஸிங்கர் இன்று கண்டிக்கு விஜயஞ் செய்தார். அவருடன் பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவும் சென்ருர்.

மேற்கு ஜெர்மன் அதிபருடன் பிரதமர் டட்லி கண்டிக்குப் பிரயாணம் செய்வதற்கு திட்டமிட்டிருக்கவில்லை.

ஆனல் நேற்று டாக்டர் கெயிஸிங்கருடன் பிரதமர் நடத்திய பேச்சுவார்த்தைகள் பயனுள்ளவையாக இருந்ததாலும் அப்பேச்சுவார்த்தைகள் முடிவடையாததாலும் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்துவதற்காகப் பிரதமர் டட்லி கண்டிக்கும் சென்ருர்.

திட்டஇலாகா டைரக்டர் டாக்டர் காமினி கொரியாவும் கண்டிக்குச் சென்றிருக்கிருர்.

இலங்கைக்கு மேற்கு ஜெர்மனி அளித்துவரும் உதவி இன்றையநிலையில் போதாதென்றும் கிடைக்கும் உதவியும் தாமதித்தே இங்கு வந்துசேருகிறதென்றும் டாக்டர் கெயிஸிங்கரிடம் பிரதமர் கூறியதாகத் தெரிகிறது.

மேலும் அதிக உதவியளிக்க மேற்கு ஜெர்மன் அதிபர் ஒப்புக்கொண்டதாகவும் அறியப்படுகிறது.

# ஆயிரத்துக்கதிகமான மாணவ மாணவிகள்

## வவனியாவில் அரசாங்க அதிபர் தலைமையில் களைபிடுங்கினர்

வவுனியா, சனி

வவுனியா அரசாங்க அதிபரின் தலைமையில் ஆயிரத்துக்குகதிகமான மாணவ மாணவிகள் இங்குள்ள வயல்களில் களை பிடுங்கினர்.

மாணவ மாணவிகள் விவசாயத்தின் முக்கியத்தை உணர்ந்து கொள்வதுடன் அதன் பயிற்சியையும் பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் இக்களைபிடுங்கும் விழா அமைந்திருந்தது.

அரசாங்க அதிபர் திரு.பி ஸி. பெரேரா பேசுகையில் ''உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு உயிர்களுக்கும் உணவு இன்றியமையாதது தொன்ருகும், இதனைத் தாம் தமக்குரிய பங்கை பூர்த்தி ஆக்கிக் கொள்ளுதல் சாலச் சிறந்ததாகும். பேல்நாடுகளில் பல பகுதி

(8-ம் பக்கம் பார்க்க)

சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய இடமாற்றத்தை சட்டரீதியாக எதிர்க்கலாமாம்

புன்னாலைக்கட்டுவன் சனி

பாடசாலைகளை அரசாங்கம் கையேற்றதும் ஆசிரியர்கள் எல்லோரும் மாற்றப்படக்கூடிய. அரசாங்க சேவையாளர் எனக் கருதுவது தவறு. அரசாங்க ஊழியர்கள் அனுபவிக்கும் அத்தனை உரிமைகளையும் ஆசிரியர்கள் அனுபவிக்கவில்லை என்பதைவிட அவர்களுடைய நிலைமை இன்னும் சட்டரீதியாகத் தெளிவாக்கப்படவில்லை. எனவே ஆசிரியர்கள் இடமாற்றத்தைச் சட்டரீதியாக நீதிமன்றத்தில் எதிர்க்காலம்'' என வடமாகாண அதிபர் சங்க உறுப்பினர் ஒருவர் கூறுகிறார். இவ்விடயங் பற்றி அடுத்த அதிபர் சம்கக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட விருப்பதாகவும் தெரிகிறது.

**REGAL** JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 Only
Gina Lollobrigida
in
M. G. M.
**HOTEL PARADISO**
in Panavision and color

**மனோகரா**
யாழ்ப்பாணம்
Daily at
6-30 & 9-45 p.m.
Joy Mokerjee
ShairaBanu - JohnnyWalker
in
**DOOR KI AWAZ**
[Hindi]

Daily 430p.m.
BEAUTIES byNIGHT
(Adults Only)

யாழ்.மாநகரசபைதேர்தல்!

## 'திகதியை அறிவித்துவிட்டு வாருங்கள்'

### பிரதமருக்குத்தந்தி

யாழ்ப்பாணம், ஞாயி.

யாழ்ப்பாணம் வருவதற்கு முன்னர் யாழ்ப்பாண மாதகரசபையின்தேர்தலுக்கான திகதியை அறிவித்துவிட்டு வரும்படி பிரதமர் டட்லி சேனநாயகாவை யாழ்ப்பாணம் வரியிறுப்பாளர்சங்கம் கோரியுள்ளது. பிரதமருக்கு வரியிறுப்பாளர் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் அனுப்பி வைத்துள்ள தந்தியொன்றிலேயே மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

'யாழ்ப்பாணம் வரியிறுப்பாளர் யாழ்ப்பாணம் வரும் தங்களை வரவேற்கிறோம். ஆனால் வாக்காளர் தமது வாக்குரிமையையும் குடியுரிமையையும் இழந்து ஜனநாயக உரிமையில்லாது வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் தேர்தலுக்கான திகதியை அறிவித்துவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்' என்று அத்தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[ந.நி.]

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம்.ஜி.ஆர் - சரோஜாதேவி
நடித்த
**அன்பே வா**

## ''ஒரு தமிழ் மகாவித்தியாலயம் இல்லையே''

குருநாகல், சனி

''அறுநூறுக்கதிகமான தமிழ் மாணவர்கள் படிக்க ஒரு தமிழ் மகாவித்தியாலயம் இல்லாத அவலநிலையில் குருநாகல் நகரம் அவதியுறுகின்றது. மூன்று தமிழ் மகாவித்தியாலயத்தில் தமிழ்க்கல்வி பெற்ற தமிழ்ப் பிள்ளைகள் இன்று தமக்கென ஒரு பாடசாலை இல்லாமல் தத்தளிக்கின்றனர். இந்த நிலைமை உடனடியாக நீக்கப்படவேண்டும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், தலைவர்களும் இக்குறைபாட்டை நீக்க உடன் முயலவேண்டும்'' என்று குருநாகல் தமிழர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் பேசிய திரு. ஈ. ஆர். திருச்செல்வம் கூறினர்.

திரு. தி. சிவசாமி தலைமையில் நடந்த கூட்டத்தில் குருநாகலில் ஒரு தமிழ் மகாவித்தியாலயம் நிறுவித்தரும்படி அரசினரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

## மலேஷியாவில்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

பழைய டொலர் வகையில் சில நாணயங்கள், பழைய

## கல்முனையில் போக்குவரத்துச் சீர்கேடு

கல்முனை, சனி

கல்முனையில் தொடர்ந்து பெய்துவந்த மழை காரணமாக, பெரியகல்லாறு, கோட்டைக்கல்லாறு ஆகிய இடங்களில் உள்ள ஆறுகளில் நீர் நிறைந்துள்ளதால் கல்முனை—மட்டக்களப்பு போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

பெரிய கல்லாறு, கோட்டைக்கல்லாறு பகுதியில் இருந்து, கல்முனைப் பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்களும், மாணவர்களும் இதனால் அதிகம் கஷ்டமுறுவதாகவும், ''வெள்ளத்தை''ப்பயன்படுத்தி சில வள்ளக்காரர்கள் ஒரு ரூபா முதல் 2-50 ரூபா வரை பிரயாணிகளிடமும், மாணவர்களிடமும் வசூலிப்பதாகவும், இதனால் மாணவர்களும் ஆசிரியர்களும் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் தெரிகிறது.

மதிப்புடனேயே இருக்குமென அறிவித்துள்ளன.

## வரி விளம்பரம்

### தேவை

தெல்லிப்பளை சுகாதார நிலையத்திலிருந்து காலை 6 மணிக்கு பால் எடுத்துக் கொண்டு பால் விநியோகிக்கும் நிலையங்களுக்கு விநியோகிப்பதற்கு சொந்த சயிக்கிள் வைத்திருப்பவர்கள் தேவை. விபரங்களுக்கு வலி. வடக்கு கூட்டுறவுப் பால் சங்கம், உடுவில் என்ற விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும். 2150

### கல்வி

தமிழ். ஆங்கிலம், சிங்களம் மூலம் சிறுவர் ஆரம்ப கல்வி பெறவும், பெண்கள் ஆங்கிலம், சிங்களம் கற்கவும் தேசிய சிறுவர் பாடசாலையில் உடனே சேருங்கள். 460, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி. 2149

### நாவலர் குருபூஜை

கொட்டாஞ்சேனை. சனி

விவேகானந்த சபையின் ஆதரவில் கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் நாவலர் குருபூஜை நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் பல கலைநிகழ்ச்சிகளும்இடம் பெற்றன.

**இப்பொழுது நடைபெறுகிறது**
**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி பி.ப. 2-30, மாலை -20, இரவு 9-30 மணிக்கு
பிளாஸா [வெள்ளவத்தை] கெப்பிட்டல் [கொழும்பு]
மைலன் [கொட்டாஞ்சேனை]
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
மற்றும் நாலு திரைகளில்
**எம். ஜி. ஆரும், ஜெமினி கணேசனும்**
முதல்முறையாக சேர்ந்து நடித்து வெற்றிகண்ட இன்பச் சித்திரம்!
கடமைக்கும் பாசத்திற்கும் நடுவே சிக்கித்தவிக்கும் ஒரு பொலிஸ் அதிகாரியின் உணர்ச்சியூட்டும் சித்திரம்! 100 நாட்களுக்கு மேல் ஓடி தென்னகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்ற சித்திரம்.
மற்றும்



ஜெயலலிதா, ஜெய்ந்தி
நம்பியார், அசோகன்,
நாகேஷ், ஸ்ரீராம்,
மனோரமா,
பி. கே. சரஸ்வதி
[நடித்த]
தேவர் பிலிம்ஸ்
**முகராசி**
டைரக்ஷன் எம். ஏ. திருமுகம்
இசை: திரை இசைத்திலகம் கே. வி. மகாதேவன்

**6-வது வாரம்**
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] லக்ஷ்மி [கரவெட்டி]
ஜெய்சங்கர் — ஜமுனா — நாகேஷ் — பேபி பத்மினி
நடித்த
ஏ. வி. எம்மின் ஜனாதிபதி பரிசுபெற்ற
**குழந்தையும் தெய்வமும்**






கோயா சோப்பும் டால்க் பவுடரும் உங்கள் ஆசைகளை நனவாக்கும்
அரிய வனப்பை வழங்குகின்றன............
கண வேளையில் உலகின் நாகரிகத் தலை
நகரங்களின் ஒய்யார அழகு மாதர்களில் நீங்களும்
ஒருவராகி விடுகிறீர்கள்...........
உலகின் தலை சிறந்த வாசனைத் தயாரிப்பாளர்கள்
சீர் செய்தளிக்கும் கோயாவின் வனப்பூட்டும்
பவுடரும் சோப்பும் தரும் வாசனையில் மிதந்து
வரும் பெண்ணின் பெருமையே பெருமை!
கோயாவின் பெயர்பெற்ற வாசனை ரகங்களில்
விரும்பியதைத் தேர்ந்தெடுங்கள்.
Gova லண்டன் - பரிஸ் - நியூயார்க்
மாநகரங்களில் மகிமை பெற்றது கோயா
ரெக்கிட அன்ட் கோலமன் தயாரிப்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைப்பிரஸ் பிரச்னையை விவாதிக்க ஐ.நா.பந்தோபஸ்து சபை அவசர கூட்டம்

## போரை விரும்பவில்லை; போர் வந்தாலும் விடமாட்டோம் என்கிறார் மக்காரியோஸ்

நியூயோர்க், நவம்பர் 25

ஐ. நா. பந்தோபஸ்து சபை, சைப்பிரஸ் பிரச்னையை விவாதிக்க, அவசர கூட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. இக்கூட்டத்தை சைப்பிரஸ் அழைத்திருந்தது.

துருக்கி எந்நேரமும் சைப்பிரசுக்குள் பிரவேசிக்கக்கூடுமென்ற அபாயம் ஏற்பட்டுள்ளதால், ஐ.நா.பந்தோபஸ்து சபை இந்த ஆபத்தை விவாதிக்க வேண்டுமென சைப்பிரஸ் கேட்டிருந்தது.

ஐ. நா. பொதுக் காரியதரிசி யூ தாண்ட், கிரீசுக்கும் துருக்கிக்குமிடையே, சைப்பிரசையொட்டிப் போர் மூளுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாகக் கூறினார்.

கிரீஸ், துருக்கி, சைப்பிரஸ் அரசாங்கங்கள் மூன்றுக்கும் அனுப்பியுள்ள கடிதங்களில் போர் அபாயத்தைத்தணிக்கும் வகையில் நடந்து கொள்ளுமாறு அவர் அவ்வரசாங்கங்களைக் கேட்டுள்ளார்.

### மக்காரியோஸ பேச்சு

இதற்கிடையில், சைப்பிரஸ் பிரச்னை தற்சமயம் ஆரம்பித்தபின் முதற்தடவையாகப் பேசுகையில், சைப்பிரஸ் ஜனாதிபதி மக்காரியோஸ், துருக்கிப் படையெடுப்பின் அபாயத்தை சைப்பிரஸிலுள்ள கிரேக்க மக்கள் கட்டுப்பாட்டுடன் எதிர்நோக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

'போர் வர வேண்டுமென்பது எமது விருப்பமில்லை. ஆனால், போர் வந்தால், அதை நாம் உறுதியுடன் எதிர்ப்போம்' என்றார் மக்காரியோஸ்.

### பிற நாடுகள் சமரசம்

சைப்பிரஸ் பிரச்னைமீது கிரீசுக்கும் துருக்கிக்கும் போர் ஏற்படாமல் தடுப்பதற்கு அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளும் முயற்சிகள் எடுத்துவருகின்றன. அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸனின் விசேஷ பிரதிநிதி, அதென்ஸில் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளைக் கிரேக்கப் பிரதிநிதிகளோடு நடத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக அவர், துருக்கிப் பிரதிநிதிகளுடன் அங்காராவில் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

அமெரிக்காவின் வலுக்கட்டாயமான குறுக்கீடு, போர் மூளுவதைச் சிறிதளவு தணித்துள்ளதாகத் துருக்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதென்ஸில் யூ தாண்டின் விசேஷ பிரதிநிதியும், வட



அத்லாந்திக் ஒப்பந்த நாடுகள் பாதுகாப்பு ஸ்தாபனத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவரும் வந்து சேர்ந்துள்ளனர். இவர்களும், கிரீசுக்கும் துருக்கிக்குமிடையே சமரசம் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்வார்கள்.

# இந்திரா காந்தி மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## 215—88 வாக்குகள் பெற்று லோகசபையில் தோல்வி

புதுடில்லி, நவ. 25

திருமதி இந்திரா காந்தியின் மந்திரிசபை மீது நேற்று லோகசபையில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் 88 வாக்குகளைச் சாதகமாகவும் 215 வாக்குகளைப் பாதகமாகவும் பெற்றுத் தோல்வியடைந்தது.

இத்தீர்மானத்தின் மீது பேசுகையில், மேற்கு வங்காள ராஜ்யத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை பற்றித் தாம் மகிழ்ச்சியடையவில்லையென்றும், அதற்கு மாருக உண்மையில் தாம் மனவருத்தமடைந்துள்ளதாகவும் பிரதமர் இந்திரா காந்தி கூறினார்.

ஆனல் கடந்த சில மாதங்களாக, மேற்கு வங்காளத்தில் சில தேசிய விரோத சக்திகள் இயங்கிவந்துள்ளதாகக் குறிப்பிட்ட திருமதி இந்திரா காந்தி, இப்போதும் சிலர் அதே நோக்கங்களுடன் அங்கு செயற்பட



முனைவதாகவும், பலாத்காரம் எந்தவித பலனையும் தராதென்றும் கூறினார்.

இந்தியாவின் பொருளாதாரம் படிப்படியாக முன்னேறி வருவதாகவும் இன்னும் சில வருடங்களில் அது தன்னிறைவுள்ள நாடாகி விடுமெனவும் பிரதமர் இந்திரா நம்பிக்கை தெரிவித்தார்.

# அல்ஜியர்ஸ் பொருளாதார மாநாட்டு அறிக்கை

## ஐ. நா. வில் சமர்ப்பிக்கப்பட்டது

நியூயோர்க், நவ. 25

அல்ஜியர்ஸ் வெளியுறவு மந்திரி திரு. போட்டா பிலிக்கர், அபிவிருத்தி குறைந்த நாடுகளின் அல்ஜியர்ஸ் பொருளாதார மாநாட்டு அறிக்கையை ஐ. நா.வில் சமர்ப்பித்துள்ளார்.

அவ்வறிக்கை, அபிவிருத்தி குறைந்த நாடுகள், தமது பொருளாதார மேம்பாட்டுக்குத் தம்மிடையே அதிக அளவில் ஒத்துழைக்கவேண்டுமென்றும், அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குப் பெருமளவில் உதவியளிக்கவேண்டுமென்றும் கோருகிறது.

### புதிய அதிபர்

சுழிபுரம், சனி

திரு. சி. சிவகுருநாதன் அராலி இந்துக்கல்லூரி அதிபராக இம்மாதம் தொடக்கம் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் பாடநூற் பகுதியில் கடமையாற்றியவர். முன்னர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் ஆசிரியராகவும் கடமையாற்றியிருக்கிறார்.

# கல்கத்தாவில் மூன்றும் தினமாக நேற்றும் கலவரங்கள்

## 4 பேர் கொல்லப்பட்டனர்

கல்கத்தா, நவம்பர் 25

கல்கத்தாவில் நேற்று மூன்றும் நாளாக நடைபெற்ற கலவரங்களில் 4 பேர் உயிரிழந்தனர். மற்றும் பலர், பொலிஸார், தீயணைப்புப் படையினர் உட்பட காயங்களுக்குள்ளாகினர்.

ஆட்சியிலிருந்து நீக்கப்பட்ட மேற்கு வங்காள ஐக்கிய முன்னணியின் ஆதரவில் நடைபெற்ற பொது வேலைநிறுத்தமும், ஹர்த்தாலும் இரண்டு நாட்கள் தொடர்ந்துநடைபெற்று, நேற்று முன் தினத்துடன் முடிவடைந்தன. ஆனலும், நேற்றும் கூட, மத்திய கல்கத்தாவிலும், ஜதாப்பூரிலும் பலாத்காரச் சம்பவங்கள் தலைதூக்கின.

இன்று காலை, கல்கத்தா நகரில் அமைதிநிலவியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### முதல் மந்திரி வேண்டுகோள்

புதிய முதல் மந்திரியான திரு. பி. ஸி. கோஷ், ஜனநாயகத்தையும் அமைதியையும் விரும்பும் மக்களனைவரையும் தமது அரசாங்கம் முறையாகச்செயற்படஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

சட்டசபை கூடவிருக்கும் தினமாகிய 29-ந் திகதியன்று ஐக்கிய முன்னணியினர் அழைத்துள்ள கிளர்ச்சி இயக்கம் பற்றி அவர் குறிப்பிடுகையில், சட்டசபை அங்கத்தவர்கள் ஜனநாயக கோட்பாடுகளுக்கிணங்கச் செயலாற்றுவதை ஐக்கிய முன்னணியினர் விரும்பவில்லை என்பதற்கு அது ஓர் அத்தாட்சி என்று குறிப்பிட்டார்.

சட்டசபைக் கூட்டத்தில், தமது மந்திரி சபைக்கு நம்பிக்கை தேடப்போவதாகவும் அவர் கூறினார்.

இதற்கிடையில் தற்போது எழுந்துள்ள நிலைமையை ஆராய ஐக்கிய முன்னணி விரைவில் கூடவிருக்கிறது.

# மலேஷியாவில் பழைய டொலர் நாணய மதிப்புக் குறைப்பு

## தொடர்ந்து ஏற்பட்ட கலகங்களில் பலர் கொல்லப்பட்டனர்

கோலாலம்பூர், நவ. 25

மலேஷிய அரசாங்கம், தனது பழைய டொலரை நாணய மதிப்புக் குறைப்புச் செய்துள்ளதையடுத்து, மேற்கு மலேஷிய தீவான பெனங்கில் நெற்று ஏற்பட்ட கலவரங்களில், பலர் கொல்லப்பட்டதாவும், மற்றும் பலர் காயத்துக்குள்ளாகியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மலேஷிய உதவிப் பிரதமர் திரு. துன் ரஸாக், இக்கலவரங்கள் நடந்த இடத்துக்கு விஜயம் செய்துள்ளார். நிலைமை மோசமானதென விவரித்த அவர், இப்போது கட்டுக்கடக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

பழைய டொலரை நாணய மதிப்புக் குறைப்புச் செய்ததையடுத்து, பொதுமக்களிடையே கிளம்பியுள்ள எதிர்ப்புக்குப் பணிந்து மலேஷிய, சிங்கப்பூர் அரசாங்கங்கள் இரண்டும்,

(2ம் பக்கம் பார்க்க)


மட்டக்களப்பு ஆனைப்பந்தி

**பிள்ளையார் கோவில்**

பிரம்ம ஸ்ரீ வி. வரதராசக் குருக்கள் எழுதுவது:

அன்புடையீர்,

நீங்கள் அனுப்பி வைக்கும் பச்சைச் சந்தனம் சுத்தமானதாகவும் நறுமணமுள்ளதாகவும், தூய்மையாகவும் இருக்கிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆனைப்பந்தி பிள்ளையாருக்குச் சந்தனக்காப்புச் சாத்தி பணிந்து அருள் பெறுகிருர்கள் அடியார்கள். உங்கள் சேவை தொடர்ந்து நடந்துவர வேண்டுமென்று எல்லாம் வல்ல சித்தி விக்னேஸ்வரனை வேண்டுகிறேன்.

இப்படிக்கு

வி. வரதராசக் குருக்கள்

இறைவன் திருமேனியில்

**சந்தனக் காப்பிட்டு**

அலங்கரிக்க மிகவும் உகந்த

**பச்சை சந்தனம்**

உடனுக்குடன் அரைத்துக் கொடுக்கிருேம்.

என்றும் எங்களிடம் கிடைக்கும்

**சுந்தரம் பிரதர்ஸ்**

கோவில் அபிஷேகப் பொருட்கள்

மருந்துச்சரக்கு விற்பனையாளர்

73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நீ உன் மட்டிலுள்ள குற்றத்தைப் பற்றிக் கவலைப் படாமல், உன் சகோதரன் மட்டிலுள்ள குற்றத்தைப் பற்றி எண்ணி, அதை நீக்க முயல்வது நல்லதல்ல. முதலில் உன் குற்றத்தை நீக்கிவிட்டு, உன் சகோதரனின் குற்றத்தை நீக்க முயற்சி செய்.

—யேசுநாதர்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்க ஞு கார்த்திகைமீ 10உ (26-11-67)

# "உலக நாடுகள் பல சுதந்திரம் பெற ரஷ்ய புரட்சியே காரணம்"

### சோவியத்புரட்சி விழாவில் வ. பொன்னம்பலம் பேச்சு

உடுவில், சனி

இன்று உலகநாடுகள் பல சுதந்திரம் பெற்று தங்கள் தங்கள் சுதந்திரங்களை தக்க முறைகளில் பாதுகாத்து பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடையக்கூடியஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பதற்கு அடிப்படை மூலகர்த்தாவாக விளங்கியது 1917-ம் ஆண்டில் ரஷ்ய தேசத்தில் ஏற்பட்ட சமூக பொருளாதார புரட்சி மாற்றங்கள் தான் என்பதில் ஐயமில்லை. ஆனபடியினுல்தான் இத்தகைய வளர்ந்துவரும் நாடுகளிலேயுள்ள மக்களும் சோவியத் ரஷ்யாவில் உள்ள மக்களுடன் கலந்து உலக சரித்திரத்தின் முக்கியமான ஒரு தினமாக இந்தத்தினத்தை நினைவுகூர்ந்து கொண்டாடி வருகின்றனர்.

கந்தரோடை தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற சோவியத் ரஷ்யாவின் 50-வது அக்டோபர் புரட்சிக் கொண்டாட்ட விழாவில் பேசிய முள்ளியவளை மகா வித்தியாலய அதிபர் திரு. வ. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினூர். உடுவில் எம். பி. திரு, வி. தர்மலிங்கம் தலைமை வகித்தார்

திரு. வ. பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

திட்டமிட்ட பொருளாதார முறையை உலகில் உள்ள ஏனைய நாடுகளுக்கு முதன் முதலில் காட்டிக் கொடுத்தது சோவியத் ரஷ்யாதான். பொருளாதார சுதந்திரம் பெற்ருல்தான் நாம் பூரண சுதந்திரம் அடைய முடியும். ஐந்து ஆண்டுகளுக்கொரு முறை தேர்தலில் வாக்களிப்பது தேர்தலில் போட்டியிடுவது மல்ல சுதந்திரம். மழ்த வாழ்வுக்குத் தேவையான உணவு, உடை, உறைவிடம் இவற்றை பெற முயல வேண்டும் சோவியத் ரஷ்யாவில் விஞ்ஞானம் சாதாரண மனிதனின் அன்ருட தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

உடுவில் எம், பி. திரு. வி. தர்மலிங்கம் கூட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசுகையில் கூறியதாவது:-

ரஷ்ய தேசத்தில் உத்தியோகமின்மை, வறுமை, நிலமில்லாதவர் என்றபேச்சுக்கே இடமில்லை. இளம் பராயந் தொட்டு பிள்ளைகள் அரசாங்கச் சொத்தாக மதிக்கப்படுகின்றமையால் அங்கு கூடிய குழந்தைகளைப் பெறும்] தாய்மார்கள் 'வீரத்தாய்' என்ற பட்டம் சூட்டிக் கௌரவிக்கப் படுகின்றனர் விவசாயிகள் கூட அங்கு மாதச்சம்பளம் பெறுகின்றனர். அதுமட்டுமல்ல அவர்களுக்கு பென்ஷன் வசதியும் உண்டு. இப்படியான முன்னேற்றத்திற்கு காரணம் அவர்களின் திட்டமிட்ட பொருளாதார முறைதான். அந்நாட்டைப் பின்பற்றி நாமும் திட்டமிட்டுச் செயலாற்றினுல் விரைவில் எல்லாப் பிரச்னைகளுக்கும் முடிவு காணலாம்.

சுன்னுகம் பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம பேசியதாவது:-

இலங்கை சிறுபான்மை மக்களாகிய நாம் வடபகுதியிலிருந்து நாட்டில் மொழி சமயம் அழிவதைக் கவனியாமல் சாதி அழிகின்றதே என கண்டிக்கிருேம் இதை விடமேலான ஒன்று அழிக்கப்பட வேண்டும் வட்டி, குத்தகை பெறுவோர் கொள்ளைலாபம் இவைகள்முற்ருக அழிக்கப் படவேண்டும் அப்போது தான்நாம் முன்னேறலாம்.

திருவாளர்கள் டொமினிக் ஜீவா எஸ். விஜயானந்தன் நடராசா, அருச்சுனன் உட்பட வேறு பலரும் பேசினர்.

## கடும் தண்டனை தேவை

பொதுமக்கள் எது நேருமென அஞ்சினுர்களோ, எது நேரக்கூடாதென்று விரும்பினுர்களோ அது நேர்ந்துவிட்டது. கோதுமைமா ருத்தலுக்கு ஐந்து சதம் உயர்ந்துள்ளது; சீனியின் விலையும் ஐந்து சதம் கூடியுள்ளது மண்ணெண்ணெய் கலனுக்கு 6 சதம் அதிகரித்திருக்கிறது. பெட்ரோல் விலையும் கூடியிருக்கிறது.

இந்த விலை உயர்வு யாவும் பொதுமக்களையே பாதிக்கும். மாவின் விலை உயர்ந்ததால் பாணின் விலை உயர்ந்துள்ளது. சீனி விலை உயர்வினுல் நேநீரின் விலை அதிகரிக்கும். பெட்ரோல் விலை அதிகரித்ததால் நம்நாட்டில் உற்பத்தியாகும் கீரை, கத்தரிக்காயின் விலைகூட அதிகரிக்கக்காரணமுண்டு.

இலங்கைரூபாயின்மதிப்புக் குறைக்கப்பட்டதன் விளைவைப் பொதுமக்கள் அனுபவிக்கத் தொடங்கிவிட்டனர். ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்டதன் நோக்கமே ஏற்றுமதியை அதிகரித்து இறக்குமதியைக் குறைப்பது அல்லது முற்ருக நிறுத்துவதுதான் ஆனுல் நாம் பெரும்பாலும் இறக்குமதியையே நம்பியிருக்கிருேம். இறக்குமதிக்குக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டதும் உள்நாட்டுப் பொருள்களுக்கும் இறக்குமதிப் பொருள்களுக்கும் கூடத் தட்டுப்பாடு ஏற்படும். பதுக்கல் கொள்ளை லாபம இன்னும் அதிகரிக்கும்.

பதுக்கலையும் கொள்ளை லாபத்தையும் தடுக்கம் நீக்கவும் அரசாங்கவும் சட்ட விதிகளைக் கொண்டு வரலாம்; கடும் நடவடிக்கை எடுக்கலாம். தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னரும் அதற்கு முன்னரும் கூட பதுக்கலையும் கொள்ளை லாபத்தையும் தடுக்க முயற்சி செய்யப்பட்டது உண்மையே. இது எந்த அளவுக்கு வெற்றியளித் திருக்கிறது? பதுக்கலும் கொள்ளை லாபமும் முற்ருக ஒழிக்கப்பட்டுவிட்டதா?

உற்பத்தியை அதிகரிப்பதற்குத் துரிதத்திட்டம் வகுக்கப்படுவதுடன் பொருள்களின் விநியோகம், விற்பனைக்கு உறுதியான சீரான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இதே சமயம் பதுக்கல், கொள்ளை லாபம் போன்றவைகளுக்குக் கடுமையான தண்டனை பகிரங்கமாக விதிக்கவும் வழிசெய்யப் படவேண்டியது அவசியம்.

## ஜனநாயகத்துக்கு சோதனை

இந்தியாவில் சென்ற தேர்தலின்பின் பல கட்சிகள் சேர்ந்து கூட்டணி அமைத்து ஆட்சிபீடமேறிய பல ராஜ்யங்களில் குழப்பமும் நெருக்கடியும் ஏற்பட்டுள்ளன. மேற்குவங்காளத்தில் அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டு ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை கவர்னர் அகற்றநேரிட்டது. அங்கு புதிய மந்திரிசபை பதவியேற்றிருக்கிறது. அதைத் தொடர்ந்து கலகமும் தோன்றி உயிருக்கும் உடைமைகளுக்கும்சேதம் ஏற்பட்டுள்ளது. ஹரியானுவில் மந்திரிசபையும் சட்டசபையும் கலைக்கப்பட்டு ஜனுதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. பஞ்சாபிலும் நிலைமை ஸ்திரமில்லை. அங்கும் ஆட்சி மாற்றம் ஏற்படக்கூடிய நிலைதோன்றியுள்ளது.

காங்கிரஸல்லாத அரசாங்கங்கள் ஆட்சிபீடத்துக்கு வந்ததால்தான் மத்திய அரசாங்கம் இவ்விதம் நடந்துகொள்கிறதென்று குற்றம் சாட்டப்படுகிறது, இந்தியாவில் பலராஜ்யங்களிலும்கட்சிவிட்டுக் கட்சிமாறும் புதுவியாதி பரவிவருவதும் இதனுல்ஆட்சிபீடமேறிய அரசாங்கங்கள் நிம்மதியாக ஆட்சிபுரியமுடியாமலிருப்பதும் தெளிவு. உத்தரப்பிரதேசத்தில் காங்கிரஸ் அரசாங்கத்துக்கும்கூட இதே கதி ஏற்பட்டது தெரிந்ததே.

நேருவின் பின் இந்திய அரசியலே குழப்பமடைந்தும் ஸ்திரமற்றுமிருக்கிறது. ஆசியாவிலேயே பெரிய ஜனநாயகநாடாக விளங்குவது இந்தியா. இந்தியாவில் ஜனநாயகத்துக்கு ஏற்படும் சோதனை இலங்கை உட்பட ஆசிய ஜனநாயகத்துக்கே பெரும் சோதனை. ஆசிய-ஆபிரிக்க நாடுகள் பலவுக்கும் பலதுறைகளிலும் வழிகாட்டிய இந்தியாவின் பெருமையை இந்தியத் தலைவர்களும் பொதுமக்களும் பாதுகாத்து நிலைநிறுத்தவேண்டும்.

## ஆபாசத்துக்கு முற்றுப் புள்ளி

ஆபாச 'நவீனம்' (நாவல்) ஒன்றை வெளியிட்டமைக்காக பிரிட்டிஷ் வெளியீட்டு நிறுவனம் ஒன்றுக்கு பிரிட்டிஷ் நீதிமன்றம் ஒன்று 100 பவுண் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்ததுடன் வழக்குச் செலவுத் தொகையாக 500 பவுண் செலுத்தவேண்டுமென்றும் உத்தரவிட்டிருக்கிறது. பம்பாயில் ஒரு பத்திரிகையில் ஆபாசப் படமொன்றைப் பிரசுரித்ததற்காக அதன் ஆசிரியருக்கு அபராதமும் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இலங்கையிலும் ஆபாசச் செய்திகளையும் ஆபாசப் படங்களையும் பிரசுரித்து வெளியிடுவதில் கூட போட்டி ஏற்பட்டு வருகிறது.

நல்ல பிரஜைகளை உருவாக்கவும், அறிவையும் நல்ல பண்புகளையும்நமது வருங்காலச் சந்ததியினருக்கு ஊட்டவேண்டிய பெரும் பொறுப்பு ஒரு நாட்டின் பத்திரிகைகளுக்குமுண்டு. "மினிஸ்கேர்ட்" என்ற குட்டையான சட்டைகளை இளம் பெண்கள் அணிவதற்கு மேற்கு நாடுகளிலேயே கடும் எதிர்ப்பு இருக்கிறது. இங்கு அந்த ஆடை அணிந்த இளம் பெண்களின் படங்களை நமது நாட்டுப் பத்திரிகைகள் பலகோணங்களில் பிரசுரிக்கின்றன.

ஆபாசச்செய்திகளையும் ஆபாசப் படங்களையும் பிரசுரிப்பதற்கு இங்கும் முற்றுப்புள்ளி வைக்க ஏற்ற நடவடிக்கை எடுக்கவேண்டிய கட்டம் வந்துவிட்டது.

## கல்விக் கொள்கையை பாதிக்க மாட்டாது

சுழிபுரம், சனி

தற்போது நடைபெறும் பாடசாலை தரம் பிரிப்பு விஷயமாக கல்விக் கொள்கையோ" அன்றி பாராளுமன்றத்திலுள்ள கல்வி மசோதாவோ எவ்விதத்திலும்பாதிக்க மாட்டாது. மூன்று வகையான அமைப்புக் கொண்ட தரம் பிரிப்பு வேலைகள் நடைபெறுகின்றன. கனிஷ்ட பிரிவு முதலாம் வகுப்பு தொடக்கம் ஏழாம் வகுப்பு வரையும் சிரேஷ்ட பிரிவு எட்டாம் வகுப்பிலிருந்து ஏச். எஸ் சி வரையும், மூன்ரும் பிரிவு முதலில் இருந்து பன்னிரண்டு வகுப்பு வரையுள்ளதாக இருக்கும். இம்முறை நல்ல முறையில் செயற்பட எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவையாகும்.

மேற்கண்டவாறு வட்டுக்கோட்டைத்தொகுதி பாடசாலைகளின் புனரமைப்பு சம்பந்தமாக பண்ணுகம் மெய்கண்டான் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய வடபகுதி கல்வி அதிகாரி திரு. ஜி. ஏ. ஞானசேகரம் குறிப்பிட்டார்.

## 'மலிவுப்பதிப்பு நூல்கள் தமிழையே அழிக்கின்றன'

சுழிபுரம், சனி

"பழந்தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்து விற்பனை செய்தல் கூட்டுறவுத்துறையில் ஒரு நல்ல முயற்சியாகும். தமிழில் மரபு வெளிவந்த சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் மறைந்து போகமலிவுப்பதிப்பு என்ற போர்வையில்இந்நாட்களில் வெளிவந்த தமிழையே அழிக்க முயலும் தமிழ்நூற் பதிப்புகளை எதிர்த்து தூயசெந்தமிழை பாதுகாப்பதே அடிப்படை நோக்கமாகக் கொண்டது எங்கள்கழகம்.

இவ்வாறு யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற்பதிப்பு விற்பனைக் கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசிய திரு.சி. சிவகுருநாதன் குறிப்பிட்டார். பின் வருவோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்சி. சிவகுருநாதன்[அதிபர் அராலி இந்துக்கல்லூரி) உபதலைவர் திரு. இ.வே. இராமநாதன். (கல்வி ஆலோசகர், கைப்பணி கல்விப்பகுதி யாழ்பாணம்] செயளாலர் சைவப் புலவர், பண்டிதர். திரு.இ. செல்லத்துரை. பொருளாளர் திரு.ம. க, சிவபாதலிங்கம்.

## 45 வயதில் 32வது குழந்தை

பிரேஸிலா [பிரேஸில்], நவ. 25

பிரேஸிலின் தலைநகரில் 45 வயதான ஒரு பெண்ணுக்கு 32வது குழந்தை பிறந்திருக்கிறது. அவரது பெயர் மேரியா கார்மென படிசூஸா.

இவருக்கு 14 வயதில் திருமணமாகியது. இவருடைய கணவர் ராய்மூம்டோ டி சூஸாவுக்கு 52 வயதாகிறது.. அவருடைய நிறை 275ருத்தல்.

உடுப்பிட்டி கி. ச.

## வரவு-செலவு திட்டம் ஏகமனதாக நிறைவேறியது

உடுப்பிட்டி, சனி

உடுப்பிட்டிக் கிராமசபையின் 1968 - 1969-ம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டக் கூட்டம் தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

அடுத்த வருடத்தில் மொத்த வரவாக ரூபா 1,60,724-11 சதமும், செலவாக ரூபா 1,39,266-11சதமும் மிச்சமாக 21,458ரூபாவும் வரவு செலவுத்திட்டத்தில் உத்தேசிக்கப் பட்டுள்ளது. நிலவரியாக 85,822 ரூபா 24சதம் அறவிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மின்சார விநியோகத்திற்கு 10,000 ரூபாவும், கிராமசபை பரிபாலனத்திற்கு 16,356 ரூபாவும், புதிய வேலைகளுக்கு 25,000 ரூபாவும், கி. ச. புதிய கட்டிடத்திற்கு 10,000ரூபாவும் சுடுகாடு பரிபாலனத்திற்கு3000 ரூபாவும், புதிய வீதிகளுக்கு 40,000ரூபாவும், தொற்று நோய்த்தடுப்பு மருந்துகளுக்கென 1000 ரூபாவும், மத்திய நூல் நிலையத்திற்கு 5000 ரூபாவும், ஆயுர்வேத வைத்திய சாலைக்கு 5637 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டம் சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## அதிபரில்லை

காங்கேசன்துறை, சனி

காங்கேசன்துறை அமெரிக்கமிஷன் ஆங்கிலப் பாடசாலை அதிபர் ஒய்வு பெற்றுப் பலமாதங்களாகியும் நிரந்தரமாக அதிபர் எவரும் இன்னும் நியமிக்கப்படவில்லையாம். சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளுக்கு பெற்ருர்கள் இதுசம்பந்தமாக கேஜர் ஒன்றை அனுப்பமவிருக்கின்றனர்.

## இன்றைய பலன்

26-11-67

ஞாயிற்றுக்கிழமை

கார்த்திகை மாதம் 10-ந் திகதி

நட்சத்திரம் - பூ... பகல் -9-42 மே... உத்தரம்.

திதி - நவமி 11-29மேல்தசமி.

சுபநேரம் - 9-12 10-42.

ராகுகாலம் - 4-42 6-12.

மேஷம்- தந்தை பி... அன்பு, தனமுடன் பு...

ரிஷபம்- புத்திக்கூர்... புதினம் கேட்டல்.

மிதுனம்- தியாகசிந்... திறமைக்கு மதிப்பு.

கடகம்- விவாத ... டம், வீண்பெயர் ... டல்.

சிங்கம்- சிநேகிதபி... சிறுமையும் சேரும்.

கன்னி- ஆக்க விரு... அதிகார மேன்மை.

துலாம்- கன்னி... உறவு, காத்திருக்... பகை.

விருச்சிகம்- சா க ... செயல், சன்மானமுன்...

தனுசு- மைந்தரா... மகிழ்ச்சி, மரியா... உண்டு.

மகரம்- ...ரிக் கு... தாக்கும், நம்பிக்... வேண்டாம்.

கும்பம்- இல்லறப் பி... ப்பு, இன்பமழை.

மீனம்- அசுர வே க... அவமானம் உண்டு.

— சோதிடக் கலாநிதி... திருமலை வேலுப்பிள்...

## ஊழல் சங்கங்கள்

யாழ்ப்பாணம், ஞா... ஊழல் நிறைந்த... 3 கூட்டுறவுச் சங்கங்... அரசாங்கம் விரை... பொறுப் பேற்கவிருக்... றது.இவை... மீது ... தப்பட்ட ...ற்றச் சா... நிரூபிக்கப் பட்டுள்ளன.

இவ்வாறு யாழ்ப்பா... தில் நடைபெற்ற கூ... றவு மகாநாட்டில் பே... கூட்டுறவு ஆக்க ஆணை... ளர் திரு.சில்வா தெரி... தார்,

இதுபற்றி இவர் மே... பேசுகையில் ஏற்கனவே... 11 கூட்டுறவு சங்கங்... ஊழல் காரணமாக ... சாங்கத்தால் பொறுப்... கப்பட்டுள்ளனவென்று... [...

## "நாவலர் ... நி...

### அவருககு அது...

யாழ்ப்பாணம், ஞா...

"தமிழ்க்கல்விவிருத்திக்... சமயத்துக்குமாகநாவல... ஸ்தாபிக்கப்பட்ட இப்... சாலை உயர்தரக் கல்வி... அளிக்கும் நிலையமாக வி... கச்செய்வதே நாவலர் ... வுக்கு நினைவுச் சின்ன... இருக்கும்."

இவ்வாறுவடமாநில ப... வித்தியாதிபதி திரு. சி... ஞானசேகரம் வண்ணை... லர் வித்தியாசாலையில் ந... பெற்ற நாவலர் தின வி... வுக்குத் தலைமை வகித்... போசும்போது குறிப்ப... டார். அவர் மேலும் ... கையில்"நாவலர்அன்று ... றிய சேவையால் கல்வி ... க்கியானது. பாடசாலை... பல தான்றின. அ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைய பலன்

26-11-67
ற்றுக்கிழமை
ந்திகை மாதம்
)-ந் திகதி

சத்திரம் - பூரம்
-9-42 மேல்
ரம்.
- நவமி
மேல்தசமி.
நேரம் - 9-12 —
.
தகாலம் - 4-42 —

ம்- தந்தையின்
தனமுடன் புகழ்.
ம்- புத்திக்கூர்மை
கேட்டல்.
எம்- தியாகசிந்தை
க்கு மதிப்பு.
ம்- விவாத நஷ்
வீண்பெயர் கேட
ப்- சிநேகிதபீடை
மயும் சேரும்.
னி- ஆக்க விருத்தி.
ர மேன்மை.
ம்- கன்னியர்
காத்திருக்கும்
ச்சிகம்- சாகசச்
, சன்மானமுண்டு.
சு- மைந்தரால்
சி, மரியாதை
.
ம்- ...ரிக் கு...ம்
ம், நம்பிக்கை
டாம்.
ம்- இல்லறப் பிணை
இன்பமழை.
ம்- அசுரவேகம்,
னம் உண்டு.

ாதிடக் கலாநிதி —
லை வேலுப்பிள்ளை

# ‘எப்படி வாழ்ந்தாலும் இறுதிமுடிவு ஒன்றுதான்’

## சங்கானை சமாதான கூட்டத்தில்பேச்சு

சங்கானை, சனி

“நடைபெற்றுமுடிந்த சம்பவங்களை திரும்பவும் நினைவுபடுத்துவதிலும் பார்க்க இனிமேல் செய்ய வேண்டிய நற்காரியங்களை நன்கு சிந்தித்தல் வேண்டும். எச்சமூகத்தவராயினும் வேற்று மனப்பான்மையுடன் வாழ்ந்தாலும் இறுதிமுடிவு ஒன்றுதான், பிறப்பும் சிறப்பும் எல்லோருக்கும் சமம்; பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட நாட்களையும் சமப்படுத்திக் கொள்வதே சுபீட்ச வாழ்க்கைக்கு வழிகோலும்” என்று நேற்று சங்கானை பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற சமாதான குழுக் கூட்டத்தில் தலைமைவகித்து பேசிய சங்கானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. டயஸ் குறிப்பிட்டார்.

அண்மையில் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் கூட்டப்பட்ட மகாநாட்டில் தெரிவுசெய்யப்பட்ட சமதானக் கமிட்டியின் முதலாவது கூட்டம் நேற்று இங்கு நடைபெற்றது.

“இந்தக் கூட்டம் கூடிய தன் நோக்கம் உங்கள் எல்லோருக்கும் தெரியும். எம்முடைய நோக்கங்களை வெற்றிகரமாக நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு உங்கள் எல்லோருடைய ஒத்துழைப்பும் அவசியம். எவராவது தேநீர்க் கடைகளில் தேநீர் கேட்டால் கொடுக்க மறுப்போரிலும், தேநீர்க்கடைகளில் பலாத்காரமாகப் புகுந்து அசம்பாவிதங்கள் புரிவோரிலும் சட்டநடவடிக்கை எடுப்பதே எமது கடமை” என்று இன்ஸ்பெக்டர் திரு. டயஸ் வலியுறுத்தினர்.

## ‘உயர்வு தாழ்வை போக்க உழைத்தார்’

கொடிகாமம், சனி

கொடிகாமம் கென்னடி இளைஞர் முன்னேற்றக் கழகக் காரியாலயத்தில் கழகத் தலைவர் திரு. க. வேலுப்பிள்ளை தலைமையில் ‘கென்னடி ஞாபகார்த்த விழா’ கொண்டாடப்பட்டது.

திரு. மு. மோகனதாஸ் பேசுகையில் கென்னடி இளைஞர்களுக்கு ஓர் வழிகாட்டி மக்களிடையே இருக்கும் உயர்வு, தாழ்வு என்ற பேதங்களை அகற்ற உழைத்தார். என்றார்.

பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: க. வேலுப்பிள்ளை, உபதலைவர்: ஆ. பாலகாந்தா செயலாளர்: மு. மோகனதாஸ், உபசெயலாளர்: க. நடராசா, பொருளாளர்: க. இராசையா.

ஏழுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## உடுப்பிட்டிக்கு மத்திய நூல் நிலையம்

உடுப்பிட்டி, சனி

உடுப்பிட்டிக் கிராமசபைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களினதும், ஏழை மாணவர்களினதும் நெடுங்காலக் குறை தீர்த்துவைக்கப்படவிருக்கின்றது. இப்பகுதியில் மத்திய நூல் நிலைய மொன்றில்லாது பல வருடங்களாக மாணவர்கள் அவதியுற்று வந்தனர். இவர்களின் குறைகளைப்போக்குமுகமாக உடுப்பிட்டிக் கிராம சபை 5000 ரூபா செலவில் வாசிகசாலையொன்றை நிறுவுவதெனத் தீர்மானித்துள்ளது. இம்மத்திய வாசிகசாலையை உடுப்பிட்டிச் சந்தை நிலத்திலேயே நிறுவவேண்டுமென்ற தீர்மானம் 8 வாக்குகளைச் சாதகமாகவும் ஒரு வாக்கைப் பாதகமாகவும் பெற்று நிறைவேறியது.

## கவிஞர் நினைவுவிழா

உடுப்பிட்டி, சனி

காலஞ்சென்ற அல்வையூர்க் கவிஞர் மு. செல்லையாவின் முதலாவது ஆண்டு ஞாபகார்த்தவிழா வரும் 29-ம் திகதி புதன்கிழமை அல்வாய் வடக்கு ஸ்ரீ லங்கா வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

கவியரங்கு, கருத்தரங்கு ஆகிய பல்வேறு நிகழ்ச்சிகள் அன்றுமாலை நடைபெறும்.

## ஊழல் சங்கங்கள்

ாழ்ப்பாணம், ஞாயி.
ல் நிறைந்துள்ள
டுறவுச் சங்கங்களை
ங்கம் விரைவில்
ப் பேறகவிருக்கின்
...ள் மீது ...சுமத்
ட...ற்றச் சா...டுகள்
கப் பட்டுள்ளன.
வாறு யாழ்ப்பாணத்
டைபெற்ற கூட்டு
கா நாட்டில் பேசிய
றவு ஆக்க ஆணையா
ரு. சில்வா தெரிவித்
பற்றி இவர் மேலும்
கயில் ஏற்கனவேயே
ட்டுறவு சங்கங்கள்
காரணமாக அர
த்தால் பொறுப்பேற்
டுள்ளனவென்றார்.

[ந. நி]

## சைவ சமய புலமை பரீட்சை

வட்டுக்கோட்டை, சனி

வட்டு. சிவன் இந்து சமய அபிவிருத்திச் சங்கம் இவ்வருடமும் சைவ சமய புலமைப் பரிசில் பரீட்சை நடத்தியது. நான்கு பிரிவுகளாக நடத்தப்பட்ட இப்பரீட்சையில் நூற்றைம்பதுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு பரிசுகளும் பத்திரங்களும் வழங்கப்படும். இப்பரீட்சை மேற்படி சங்கத்தால் பிரதிவருடமும் நடத்தப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியருக்கு கடிதங்கள்

# ஆசிரியர் இடமாற்றம் நியாயமானது

வட பகுதியிலேயே பல காலம் ஒரு சாரார் தமிழ் மாணவருக்குத் தரமான [விஞ்ஞான-கலை] கல்வியை ஊட்டிவந்த அனுபவம்மிக்க ஆசிரியர்கள் இதுவரை மாற்றுந்தாய் மனப்பான்மையோடு நடத்தப்பட்ட தென்னிலங்கைத் தமிழ் மாணவருக்குக் கல்வியூட்டும் வாய்ப்பொன்றை செய்து கொண்டிருக்கும் கல்வி அமைச்சுக்கு தமிழ்மக்கள் சார்பிலும், ஆசிரியர் சார்பிலும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். தனிப்பட்ட முறையிலும், அரசியல் நோக்கிலும் இந் நியாயமான இடமாற்றத்தை எதிர்க்கும் சில பலருடைய குரலுக்குக்காது கொடுக்கவேண்டாம் என்று அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறோம்.

கல்வி அமைச்சு இப்போது மேற்கொண்டிருக்கும் இடமாற்றத்திட்டம் பெருமளவு நீதியானது.

[அ] 45 வயதுக்கு மேற்பட்ட தளர்ச்சிக்கால ஆசிரியர்களுக்கு விலக்கு அளித்திருக்கிறது.

[ஆ] ஒரே இடத்தில் 10 ஆண்டுகள் சேவை செய்யச் சந்தர்ப்பமளித்திருக்கிறது.

[இ] ஆசிரியர்களை அரசியல் வாதிகள் ஆட்டக்காய்கள் ஆக்காவண்ணம் நிரந்தரத்திட்டம் வகுத்திருக்கிறது.

(ஈ) சமுதாயம் அனைத்தும் கல்வித்தரமுயர இத்திட்டம் வகைசெய்யுமென எண்ணியிருக்கிறது.

எனவே, இந்த அருமையான இடமாற்றத் திட்டத்தை எதிர்ப்பவர்கள் தென்திசைவாழ் தமிழரைப் புறக்கணிப்பதோடு மட்டுமன்றி அவர்கள் தொடர்ந்தும் தமிழராய் இருக்கவேண்டுமென்ற விருப்பமில்லாதவர்கள். தென்னிலங்கையில் பணியாற்றும் பட்டதாரிகளை, பயிற்சிபெற்ற ஆசிரியர்களை இகழ்பவராகின்றனர். (இதனைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும் அவர்களும் நம் சோதரர் அல்லரோ?)

### தெரிந்த விஷயம்

இந்நாட்டில் வாழ் தமிழ் மக்களுள் கிட்டத்தட்ட எழுபத்தைந்து சத மாணவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வெளியே குடிபதிகளாகி ஆண்டாண்டு வசித்து வருகிறார்கள். இவர்கள் நம்மை வாழ்வித்தும் வருகிறார்கள். இவர்கள் குழந்தைகள் தாய்மொழியாம் தமிழில் உயர் கல்வி பெறச்செய்வது ஆசிரிய சமூகத்தின் கடனல்லவோ? இக்கடமையைத் தட்டிக் கழிப்பது விரோதமான தன்றோ?

தாய்மொழியே போதனு மொழி என்ற உரிமைக்குரல் ஆட்சியாளரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இத் தாய்த் தமிழில் விஞ்ஞானம் போதிக்க நாம் ஏன் ஆவலோடு முன்வரக்கூடாது. உத்தியோகம் விரும்பி புருணிக்கும், நைஜீரியாவுக்கும் செல்லவிருக்கும் நம் தமிழர்கள் ஆனையிறவுக்கு வெளியேயுள்ள நம சகோதரருடன் உறவாடிப்பணிபுரியப் பின்னிற்பது ஏன்?

தென்தமிழ்க் குழந்தைகள் பெறவேண்டிய கல்வியை அளிக்க ஆவனசெய்யவேண்டியது அரசியல் வாதிகளதும், கல்விமான்களதும் கடமையல்லவா?

நமக்கே உயர் கல்வியும் உத்தியோகமும் ஈழமெங்கும் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்பதில் சமுதாயத்துக்கு எங்கேயிருக்கிறது.

யாழ்ப்பாணக்கல்வித்தரம் வீழ்ச்சியடையும் என்ற கற்பனை, ஒருவேளை சிறிது காலத்துக்குக் உண்மையாகிவிட்டாலும் தென்னிலங்கைத் தமிழ்மாணவர் தரமுயர்ந்து சமுதாயச் சீர்மை ஏற்படுமென்பதை நாம் மறக்கக்கூடாது.

அனுபவம்மட்டும் கல்வித் தரத்தைக் கூட்டுமா? ஒய்வுபெறும் அனுபவஸ்தர்களின் இடத்துக்குப் புத்தம்புதுப் பட்டதாரிகள் வந்து சிறந்த கல்வி வழங்கிவருவது எங்கும் கண்கூடு.

கல்லூரியிலிருந்து பல பேரை ஒரேயடியாக மாற்றஞ்செய்வதால் திடீர் வீழ்ச்சி ஏற்படுமென்பது உண்மையாகவிருக்கலாம். அதற்குப்பரிகாரம் இடமாற்றத்தை எதிர்ப்பதல்ல. படிப்படி நடைபெற ஆவன செய்வதுதான் வழி, இவ்வழியை விட்டுவிட்டு ஆசிரிய சமுதாயம் அனைத்தையும் பங்குகொண்ட இடமாற்றத்தை எதிர்ப்பது நியாயமா எனச் சிந்திக்க வேண்டுகிறோம்.

இலங்கை முழுதும் தமிழரும் தமிழும் வாழவிரும்பும் பெரு நோக்குடையவர்கள், எம்மைப்போல ஏனையவரும் சிறப்படைய வேண்டும் என்று அவாவுகிறவர்கள், கிழக்கும் — வடக்கும் ஏன் தெற்கும் ஒன்றே என்று காரியம் ஆற்றும் பெருமக்கள் நம்மகத்திருக்கும் கல்விச் செல்வத்தை உவந்தியும் ஆசிரியப் பெருமக்களைப் பொதுச்சொத்தாகக் கருதுவார்கள் என்று எண்ணுகிறோம்

சு. கணபதிப்பிள்ளை
(சி. குமாரசாமி)
நெ. ம. வித்தியாலயம்,
கரவெட்டி.

ஃ ஃ ஃ

### நோயாளர் கஷ்டம்

காங்கேசன்துறை காசநோய் ஆஸ்பத்திரியில் நோயாளர் பல கஷ்டங்களுக்குள்ளாகின்றனர். இங்கு மூன்று நேரமும் நோயாளருக்கு பாண் தான் உணவாகக் கிடைக்கிறது. சுகாதார அதிகாரிகள் இதுபற்றி கவனித்து ஆவன செய்வார்களா?

வி. தினகரன்
ஆஸ்பத்திரி,
காங்கேசன்துறை.

## ஆர்த்ரா தரிசனம்

ஒரு மாதத்தில் இரு நட்சத்திரங்கள் வர நேர்ந்தால் பிந்தியதையே கொள்ள வேண்டுமெனக் காரணம், காமிகம் ஆகிய இரு ஆகமங்களும் மிகவும் தெளிவாக எடுத்தியம்புகின்றன. எனினும் பிந்தியதில் மிருகசீரிடமும், திருவாதிரையும், சதுர்த்தசியும் ஒரே நாளில் அமைவதால் அது தோஷமுடைத்தாகின்றது. மேலும் இவ்வருடம் மார்கழி மாதம் 30ந் திகதி திருவாதிரை 47நாளிகை 9 விநாடி வரை நிற்கின்றது. தைச் சங்கிராந்தி அன்று 30 நாளிகை 14 விநாடியளவில் நிகழ்கின்றது. இதில் சங்கிரம தோஷம் இருக்கின்றது

நிருத்த மூர்த்திக்குக் கொடியேற்றுவிழா நடைபெறுமிடங்களில் இந்த முக்கூட்டுக் குற்றம், சங்கிராந்திக் குற்றம் முதலியன தோஷமாகாது. சிதம்பரத்திலே கொடியேற்றுவிழா நிகழ்வதால் அங்கு அது குற்றமல்ல. எனினும் ஈழத்தில் வாழும் சைவமெய்யன்பர்களாகிய நாங்கள் குற்றமில்லாத நாளையே தேர்ந்தெடுக்கவேண்டியது ஆகம விதிகளுக் குட்பட்டதாகும். இங்கு ஆகம விதிகளில் நன்கு பாண்டித்தியம் பெற்ற பெரியார்களும் மார்கழி மாதம் 3ந் திகதி வரும் திருவாதிரையே சாஸ்திர சம்பிரதாயப்படி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தகுந்த ஆதாரங்களுடன் ஆணித்தரமாக எடுத்துக்காட்டியுள்ளார்கள். மேலும் இந்தியப் பஞ்சாங்கங்கள் மார்கழி மாதம் 30ந் திகதி திருவாதிரையையே மேற்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள போதிலும் மார்கழி மாதம் 3ந் திகதியில் திருவாதிரையை ஏன் மேற்கொள்ளக்கூடாது என்பதற்கு இன்றுவரை எதுவித விளக்கமும் தர முன்வரவில்லை. எனவே இலங்கைப் பஞ்சாங்கங்களை அனுசரித்து மார்கழி மாதம் 3ம் திகதி வரும் திருவாதிரையையே மேற்கொள்ளவேண்டும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை
மங்களேஸ்வரி சோதிட நிலையம்,
இல: 89, கிறீன் வீதி,
திருக்கோணமலை.

## “உரிமையும் கடமையும் கேட்டுப் பெறுவதல்ல”

உடுப்பிட்டி, சனி

இளம் உள்ளங்களின் துடிப்பே உலகத்தின் விளிப்பாகும். இன்று இலங்கையைப் பொறுத்த வயிரல் தமிழினத்தவர் களிடையே பாரம்பரிய சொத்துக்களான உரிமையும் கடமையும் படிப்படியாக மறைந்து செயலற்று வருகின்றன. இதற்கு நாமே காரணம், அரசியல் வாதிகளின் முன் யோசனையற்ற பிடிவாதமும் தமிழினத்தின் வீழ்ச்சிக்கு ஒருகாரணமாகும் அரசியல் வாதிகள் தமது கடமைகளை சரிவர செய்தபின்னரே உரிமைக்காகப் போராடவேண்டும். உரிமைஎன்பதுமற்ற இனத்தவரிடம் கேட்டு இரந்துபெறும் சரக்கல்ல: கடமையும் அத்தகையதே.

இன்றைய தமிழ்; இளைஞர்கள் பொருமையினலும் சுயநலத்தினலும் சிக்கிச் சீரழிந்து போவது வேதனைக்குரியது, கட்சிச் சார்பற்ற இயக்கங்கள் மூலம்தான் மக்களின் குறைகளை போக்கமுடியும் சாதிமத இனபூசல்கள் இல்லாத ஒரு சமுதாயமே உருவாக வேண்டும் இச்சமுதாயம் பல மொழிகளைப் பேசுபவர்களைக் கொண்டுஐக்கியமாக வாழவேண்டும்

இவ்வாறு பருத்தித்துறையிலநடைபெற்ற அகில இலங்கை மக்கள்முன்னேற்ற இயக்கத்தின் நிர்வாகசபை அங்கத்தவர்கள் ஆலோசனைக்கூட்டத்தில் பேசுகையில் திரு பா வைரவநாதன் கூறினர்.

இக்கூட்டத்துக்கு தலைமை வகித்த திரு இ. இரகுபதி ராசா பேசுகையில் ஒருநாட்டின் வளத்தை காப்பாற்றுவதற்கு உணர்ச்சியுள்ள நூறு இளைஞர்கள்போதும். எனவே வாலிபர்கள் தங்களிடையேயுள்ள தனிப்பட்ட விரோதங்களை மறந்து நாட்டுக்கு சேவைசெய்ய முன்வரவேண்டும்.

திருவாளர்கள் எம். சிவபாலன். செ. இராமச்சந்திரன், வேலாயுதம், இ. சிறீரங்கநாதன் ஆகியோரும் பேசினர்.

கிராமங்கள்தோறும் மக்கள் முன்னேற்ற இயக்கக்கிளைகளை நிறுவி இளைஞர்கட்கு உற்சாகமூட்டுவதெனவும், ஸ்தலஸ்தாபன சபைத்தேர்தல்களில் போட்டியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# நாவலர் பாடசாலை உயர்கல்வி நிலையமாக வேண்டும்

## ...ருககு அது ஒரு நினைவுச் சின்னமாக விளங்கும்”

...யாழ்ப்பாணம், ஞாயிறு
...மிழ்க்கல்வி விருத்திக்கும்
...ந்துக்குமாக நாவலரால்
...பிக்கப்பட்ட இப்பாட
... உயர்தரக் கல்வியை
...கும் நிலையமாக விளங்
...ய்வதே நாவலர் நினை
... நினைவுச் சின்னமாக
...கும்.”
...வாறுவடமாநில பதில்
...யாதிபதி திரு. சீ.ஏ.
...சேகரம் வண்ணை நாவ
...த்தியாசாலையில் நடை
... நாவலர் தின விழா
...த் தலைமை வகித்துப்
...ம்போது குறிப்பிட்
அவர் மேலும் பேசு
...ல் “நாவலர் அன்று ஆற்
...சேவையால் கல்வி விரு
...னது. பாடசாலைகள்
...ான்றில. அவர் செய்த சேவையை இன்றுள்ளவர்கள் தக்க அளவு அறியாமல் இருப்பது ஒரு குறையாகும். அவரின் தொண்டுகளைப் போற்றி வளர்ப்பதுடன் அதன் வழி நடக்கப் பழகிக்கொள்ளவேண்டும்.”, என்றார்.

பண்டிதை அமிர்தாம்பிகை சதாசிவம் பேசுகையில், நாவலர் பெருந்தகை நூறு ஆண்டுகளுக்கு முன் தமிழ்சைவவளர்ச்சிக்காக ஆற்றிய தொண்டின் திறனை நாம் நினைத்துப்பார்க்க வேண்டும். அவர் எவ்வளவோ கஷ்டமான சூழ்நிலையில் தனித்து நின்று தமது சேவையைச் செய்துள்ளார் என்பதை அறியமுடிகிறது சைவசமயப் பாடசாலைகளின் தேவையை உணர்ந்து அதற்காக அயராது உழைத்து வெற்றி கண்டார். சைவ சிந்தாந்த நெறியைப் பரவச் செய்தார். சமய நூல்களையும் தமிழ் நூல்களையும் தாமே அச்சகம் நாட்டி வெளியிட்டார். அதனால் நாம் இன்று பெருமையடையத் தக்கதாக இருக்கிறது என்றார்.

ஆசிரியர் சி. சீவரத்தினம் பேசுகையில் “நவலர் பெருமான் தமிழ் நாட்டில் ஒரு பெரிய நீதிமானுகத் தோற்றியவர். நீதியையும் நேர்மையையும் கடைப்பிடித்து ஒழுகினர் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கூட்டுறவுமூலம் பொருளாதார சுதந்திரம் பெறமுடியும்"

— அரசாங்க அதிபர்

## கூட்டுறவில் யாழ்ப்பாணம் முன்னேறக் காரணம் என்ன?

யாழ்ப்பாணம், சனி

'அகிலஇலங்கையிலுமுள்ள மக்களில் யாழ்ப்பாண மக்களே கூட்டுறவுத் துறையில் முன்னணி வகிக்கின்றார்கள். ஆறு லட்சம் மக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வசிக்கின்ற போதிலும் ஒரு லட்சம் மக்கள் மட்டுமே கூட்டுறவு அங்கத்தவர்களாக இருப்பது போதாது.'

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ் நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டுறவு மகாநாட்டின் மாலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசிய வடபகுதி அரசாங்க அதிபர் திரு வேணன் அபயசேகரா தெரிவித்தார்.

திரு. வேணன் அபயசேகரா மேலும் பேசியதாவது:-

கிராமப்புறங்களில் தான் முதலில் கூட்டுறவை வளர்க்க வேண்டும். நாம் சுதந்திரம்பெற்றாலும் முதலில் பொருளாதார சுதந்திரத்தைப் பெற வேண்டும். அதனைக் கூட்டுறவு மூலம் தான் பெறமுடியும். இதற்கு கூட்டுறவு அங்கத்தவர்களாகச் சேர்வோர் நேர்மையும் உண்மையையும் கடைப்பிடிப்பவர்களாக இருக்க வேண்டும் முதலில் இதற்கு நல்ல தலைவர்கள்வேண்டும்.

இன்று நாட்டில் உணவு உற்பத்தியில் முன்னனி வகிக்கும் மாவட்டங்களில் யாழ்ப்பாணமும் முதலிடம் வகிக்கின்றது. முதலாவதாக இங்கு வெங்காய உற்பத்தி நன்கு அபிவிருத்தியடைந்துள்ளது. உருளைக் கிழங்கு உற்பத்தியும் அபிவிருத்தியடைந்து வருகின்றது. யாழ்ப்பாணத்தில்கூட்டுறவு இயக்கங்களின் ஆதரவுடன் உற்பத்தி நன்கு முன்னேறி வருகின்றது. எதிர் வரும் காலத்தில் இது இன்னமும் சிறக்க நல்ல அறிகுறிகள் இப்போதே தெரிகின்றன.

### யாழ்ப்பாணத்தின் முன்னேற்றம்

கூட்டுறவுப்பகுதிசிரேஷ்ட ஆணையாளர் திரு. சில்வா பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

நான் இப்பதவியில் நியமிக்கப்பட்டதும் முதலில் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி இதுவே தான். அதுவும் கூட்டுறவுத்துறையில் நன்கு அபிவிருத்தியடைந்த யாழப்பாணத்தில் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு முறை நன்கு அபிவிருத்தியடைந்துள்ளதற்கு என்னால் இரண்டு காரணங்களைத்தான் கூற முடியும். முதலாவதுயாழ்ப்பாணத்து வாழ்க்கை மிகவும் கஷ்டமானதாகையால் அவர்கள் வறுமையிலிருந்து நிவாரணம் பெற கூட்டுறவு இயக்கத்தைப் பயன்படுத்துகிறார்கள். இரண்டாவது யாழ்ப்பாணத்து மக்கள் அறிவும் நேர்மையும் உள்ளவர்களாததால் கூட்டுறவு இயக்கத்தை நடாத்த நல்லதலைவர்கள் இங்குண்டு. கூட்டுறவு இயக்கமானது ஒரு வாழ்க்கைமுறையாகும் என்பதையும்இதற்கு நம்பிக்கையும் நாணயமும் அவசியம் தேவைஎன்பதையும்இப்பகுதிமக்கள் உணர்ந்ததாலேயே இங்கு கூட்டுறவு இயக்கம் நன்கு அபிவிருத்தியடைந்துள்ளதென்று துணிந்து கூறலாம்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. நேசையா பேசுகையில் மன்னார் மாவட்டத்தில் மொத்தம் 230 கூட்டுறவு இயக்கங்கள் உண்டென்றும் இவற்றின் உதவியால் இங்கு கடந்த வருடம் நெல் உற்பத்தி 33விகிதம் அதிகரித்துள்ளதென்றும் குறிப்பிட்டார்.

## இராமநாதன் நினைவு விழா

கொட்டாஞ்சேனை, ஞாயிறு

சேர். பொன்னம்பலம் இராமநாதன் நினைவுவிழா இன்று கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்ச்சிகளுக்கு சைனட்சபைத் தலைவர் திரு. ஏ. ரத்னாயக்கா தலைமைவகிப்பார். மற்றும் தமிழ், சிங்கள, முஸ்லீம் அரசியல் தலைவர்கள், பேச்சாளர்கள் பலர் சிறப்பு சொற்பொழிவாற்றுவார்கள்.

எலிபன்ட் பிரான்ட்

ஒரேஞ் பார்ளி




எப்பொழுதும் அபிமானத்துக்குரியது

★

தெம்பூட்டும் அளவானது

★

சுவையான தரமுடையது

★

அதி சுத்தமானது

எலிபன்ட் ஹவுஸ்

சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்

கொழும்பு [illegible] திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பாடசாலை உதைபந்தாட்ட

'ஏ' பிரிவு சாம்பியன்

# மகாஜனவா, கொக்குவில் இந்துவா? — 29-ல் தெரியும்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பாடசாலை உதைபந்தாட்டச்சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் தொடர்ந்து ஒரு மாத காலமாக நடைபெற்றுவரும் கல்லூரிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தற்பொழுதுஇறுதிக்கட்டத்தை அடைந்திருக்கிறது. இப்போட்டியில் கலந்துகொண்டசகலயாழ். மாவட்டகல்லூரிகள் அனைத்தையும் தோற்கடித்து முதலாம் பிரிவு 'ஏ' பிரிவில் கொக்குவில் இந்துக்கல்லூரியும் தெல்லிப்பளை மகாஜன கல்லூரியும் தற்பொழுது முன்னணியில் யார் சாம்பியன் என்ற நிலையில் நிற்கின்றன.

இதுவரை நடைபெற்ற போட்டிகளின் புள்ளி விபரங்களின்படி இவ்விரு கல்லூரிகளும் தல 7 புள்ளிகள் பெற்று சமநிலையிலிருந்தன. ஆனல் மானிப்பாய் இந்துவுக்கும் கொக்குவில் இந்துவுக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் அமோக வெற்றியீட்டிய கொக்குவில் இந்து மேலும் 2 புள்ளிகளைப்பெற்று மகாஜனவிலும் பார்க்க 2 புள்ளிகளை மேலதிகக்கொண்டு சாம்பியன் பட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் நிலையிலுள்ளது.

எனினும் 7 புள்ளிகள் பெற்றுள்ள தெல்லிப்பளை மகாஜனவுக்கு மானிப்பாய் இந்துவுடனன மற்றெரு மோதல் காத்துக்கிடக்கிறது. எதிர்வரும் 29-ம்திகதி நடைபெறவிருக்கும் இம் மோதலில் மகாஜன மானிப்பாயைத் தோற்கடிககுமேயானல் மேலும் 2 புள்ளிகளைப்பெற்று மகாஜனவுடன் சமபுள்ளிப்பலத்துடன்(9-9) தன்னை ஆக்கிக்கொள்ளும்.

இப்போட்டியில் மகாஜன கோஷ்டி மானிப்பாயைத் தோற்கடிக்காமல் வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடித்தாலும் கொக்குவில் கோஷ்டியிலும் பார்க்க ஒரு புள்ளி குறைவாகவேகாணப்படும். இந்த நிலை மகாஜனவுக்கு ஏற்படுமானல் கொக்குவில் இந்துக்கோஷ்டியே முதலாம் பிரிவு ('ஏ') சாம்பியனகக் கருதப்படுமெனத் தெரிகிறது. மகாஜன மானிப்பாயை வெற்றியீட்டுமானல் கொக்குவில் இந்துவுக்கும் தெல்லிப்பளை மகாஜனவுக்குமிடையேயான சாம்பியன் போட்டி நடைபெறுமென யாழ். உதைபந்தாட்டத்தை ஒரே பார்வையில் நோக்குபவர் கருதுவர்.

எனவே 'ஏ' பிரிவு சாம்பியன் யார் என்பதை நிர்ணயிக்கும் தெல்லிப்பளை மகாஜனவுக்குமானிப்பாய் இந்துவுக்கும் இடையே நடைபெறவிருக்கும் மோதல் மிகவும் கரரசாரமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (வி.நி.)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

பண்டத்தரிப்பு, சனி

வலி-மேற்கு விளையாட்டுப் பிரிவு '1' ஆதரவில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டியில் இளவாலை சென். ஆன்ஸ் விளையாட்டுக் கழகமும், முள்ளானை விளையாட்டுக் கழகமும் கலந்துகொண்ட போட்டியில் முள்ளானை விளையாட்டுக் கழகத்தினர் 1-0 கோல்களால் இளவாலை சென். ஆன்ஸ் கழகத்தைத் தோற்கடித்தனர்.

மேற்படி சுற்றுப்போட்டியில் மாதகல் விளையாட்டுக் கழகத்துக்கும் விளான் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற போட்டியில் மாதகல் விளையாட்டுக்கழகத்தினர் திறமையாக விளையாடி 2-1 கோல்களைப் பெற்றனர்.

இளவாலை என்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு திருவாளர்கள் நடராசா, சி. இம்மானுவல் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

## மீனவர்களுக்கு இயந்திரப்படகு

காங்கேசன்துறை, சனி

வடபகுதியில் இயந்திரப் படகு கடனுதவி மூலம் மீன்பிடி இலாகாவிடம் விண்ணப்பம் கோரியுள்ள மீனவர்களுக்கு ஒவ்வோர் பிரிவிலும் உள்ள மீன்பிடி இலாகா கந்தோர்களில் விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன.

17,500 ரூபா பெறுமதியான இயந்திரப் படகுகளை மாதம் மாதம் கட்டக் கூடிய முறையில் மீன்பிடி இலாகா மீனவர்களுக்கு கொடுக்கவிருக்கிறது. இதற்கான விண்ணப்பங்களை நானூற்றுக்கு மேலதிகமாக வடபகுதியிலிருந்து மீன்பிடி இலாகாவுக்கு அனுப்பப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## 'வர்த்தமானி'யின் தாமதம்

காங்கேசன்துறை. சனி

மயிலிட்டி உப-தபாற்கந்தோருக்குவரும் வர்த்தகமானிஒருவாரம் இரண்டுவாரம் தாமதித்துத்தான் வந்துசேருகிறது. இதனுல் விண்ணப்பதாரர் வர்த்தமானியைப் பார்த்துவிட்டு ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர். வர்த்தமானி வெளியாகி இரண்டு வாரத்தால் பார்வைக்கு வருவதால் கோரப்படும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பதேதி முடிவடைந்து விடுகிறதாம்.

# பாதிக்காதவகையில் ஆசிரிய இடமாற்றம்

## மத்திய கல்லூரி அதிபர் கருத்து

யாழ்ப்பாணம், ஞாயி.

''கல்விப் புனரமைப்பு அல்லதுபுதுஅமைப்பு நெடுங்காலமாகப் பின்போடப் பட்டுவருகின்றது. புதிய கல்விமசோதா விரைவில் வெளிவருமென்றும் அதன் மூலம் பிரச்னைகள் தீர்வு காணப்படும் என்றும் நாம் நம்புகின்ருேம். பாடசாலைகளில் விஞ்ஞானக்கல்வி வேண்டுமென்ற குரல் உயர்ந்துவருகின்றது. எமது கல்லூரியில் இடநெருக்கடி காரணமாக இது பெரும் பிரச்னையாகவிருக்கின்றது''

இவ்வாறு சென்ற விரழக்கிழமை நடைபெற்ற யாழ். மத்தியகல்லூரி வருடாந்தப் பரிசளிப்புவிழாவின் போது தமது அறிக்கையை சமர்ப்பித்துப் பேசுகையில் கல்லூரி அதிபர் திரு. இ. சபாலிங்கம் தெரிவித்தார்.

திரு. கு. சச்சிதானந்தாவும் அவரது பாரியாரும் பிரதமவிருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். செல்வன் ந. பாலகுமார்வரவேற்புரைநிகழ்த்தினுர்,

அதிபர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:

கல்வித்துறையில் நாம் ஒரு புதிய திட்டத்தை எதிர்பார்க்கின்ருேம். புனரமைப்புத் திட்டத்தால் 8-ம் வகுப்பு கல்லூரிப் பிரிவுடன் சேர்க்கப் பட்டுள்ளது. இந்த மாற்றத்தை வரவேற்கின்ருேம். பாடசாலைகளை கனிஷ்ட சிரேஸ்ட பிரிவுகளாக வேறுபடுத்தல் வரவேற்கத்தக்கது. இதனுல் எங்கள் கல்லூரி ஆரம்பக் கல்வியையும் உயர்தரக் கல்வியையும் கொண்ட ஒரு உயர் கல்லூரியாகும்.

ஒருங்கு படுத்தப்பட்டுள்ள ஆசிரிய சேவையில் இடமாற்றம் தவிர்க்கப்பட முடியாததாகலாம். ஆனல் மாணவரின் நலன்கள் பாதிக்கப்படாத முறையில் இடமாற்றத்திட்டம் அமைய வேண்டுமென பெற்ருேரும் கல்விமான்களும் மற்ருேரும் கேட்பது தவறல்ல. எனவே ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும் போது கல்லூரி அதிபர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டியது அவசியமாகும்.

திருமதி சச்சிதானந்தா பரிசில்களை வழங்கினுர், பழைய மாணவர் சங்க செயலாளர் திரு. நா. இராசநாயகமும் செல்வன் எஸ் சிவசோதியும் நன்றிதெரிவித்துப் பேசிர்ஞுகள் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## சப்தரிஷி வாக்கிய விரிவுரை

யாழ்ப்பாணம், திங்கள்


யாழ்ப்பாண இந்துக்கலாசார நிலைய ஆதரவில் 'சப்தரிஷி வாக்கியம்' என்னும் பொருள்பற்றி உள்ளூர் வருமானப் பகுதிக் கொமிஷனர் திரு. எஸ. சிற்றம்பலம், யாழ். இந்துக்கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் இம்மாதம் 28-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5-30 மணிக்கு ஒரு விரிவுரை நிகழ்த்துவார்.

## புதிய நிர்வாகிகள்

காங்கேசன்துறை, சனி

மயிலிட்டி - வீரமாணிக்கத்தேவன்துறை - கண்ணகி படிப்பக புது வருட உத்தியோகத்தர்கள் தெரிவு தலைவர் திரு. உ. குணபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புது வருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்;-

போஷகர்: திரு.கா.துரைஐயா, தலைவர்: திரு. உ. குணபாலசிங்கம், செயலாளர்: திரு. வி. அருணகிரிநாதன், தனதிகாரி; திரு. து. விஜயரத்தினம், விளையாட்டுப்பகுதித் தலைவர்; திரு. மா. சோமேஸ்வரன். மூவர்குழுவொன்றும்தெரிவு செய்யப்பட்டது, மீன்பிடி அபிவிருத்திக்கும் நால்வர் குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

அதிக வனப்பும் எழிலும் லாவண்ணியமும் பெற

பொன்ட்ஸ் வனிஷிங் கிறீம்

உங்கள் சருமத்தின் எண்ணெய்ப் பிசுக்கை அகற்றி, மாசுமறுக்களையும் குளிந்த மயிர்க் கண்களையும் மறைத்து, கரும்புள்ளிகள் உண்டாகாமல் காக்க வல்லது எண்ணெய்ப் பிசுக்கற்ற இதமான பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமத்தைப் பாதுகாத்து, சோபை யூட்டி நாளுக்கு நாள் அதிக வனப்பும் எழிலும் லாவண்ணியமும் உடையோராகத் திகழவைப்பது பொண்ட்ஸ்-வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமம் பட்டுப்போன்று மிருதுவாக இருக்க பொண்ட்ஸ் வனிஷிங் கிறீமைத் தனியே உபயோகியுங்கள் அல்லது உங்கள் முக ஒப்பனை மணிக்கணக்கில் மலர்ச்சியுடன் இருக்க இதனை ஓர் அஸ்திவாரப் பூச்சாக உபயோகியுங்கள்.




அழகேனும் அணிபுனைந்து சருமத்திற்குச் சோபையூட்ட

பொன்ட்ஸ் வனிஷிங் கிறீம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலி

# கட்டுகொட கடக்கரையில் கண்டெடுக்கப்பட்ட சடலம்

காலி, சனி

காலி, டல்போட் டவுணைச் சேர்ந்த 22 வயதான மஹதூன் என்பவரைக் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் பி. எம். எம். மசூர், எம். எம். ஹபீஸி, அவரது தந்தை எம். எம். தாஸீம் ஆகிய மூவரையும் காலி சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு ஆஜராகும்படி பூர்வாங்க விசாரணை நடத்திய காலி நீதவான் திரு. கொலின் மெண்டிஸ் உத்தரவிட்டார்.

இறந்தவரான என். எல். கே. மகூதூன், காலியில் வீட்டுத்தளபாட வாடகைக் காரராகத் தொழில் செய்து வந்தார். இவரது சடலம், கடந்த ஜூன் மாதம் நடுப்பகுதியில் கட்டுகொட கடற்கரையில் கிடக்கக் காணப்பட்டது. காலிப்பதில்சட்ட வைத்திய அதிகாரி, டாக்டர் பி. டி. கே. சில்வா, பிரதே பரிசோதனை நடத்தினார். ஆனால், மரணத்துக்கான காரணம் இன்னது என்பதை அவரால் கூறமுடியவில்லை.

பிறகு காலிப்பொலிசாருக்குக் கிடைத்த அனுமதேய மகஜர்களையடுத்து, சப் இன்ஸ்பெக்டர் விக்கிரமசூரியா நடத்தியபுலன்விசாரணைகளின்விளைவாக நான்கு பேர் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

பூர்வாங்க விசாரணை நடந்து கொண்டிருக்கையில் பிரேதத்தைத் தோண்டியெடுத்து மறு பரிசோதனை செய்யவேண்டுமெனப் பொலிசார் கோரிய விண்ணப்பத்தை அப்போதைய காலி நீதவான் திரு. ஜே. ஜி. எல். சுவாரிஸ் அனுமதித்தார்.

மஹதூனின் சடலம் 63 நாட்களுக்குப்பின் தோண்டியெடுக்கப்பட்டு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. காலி சட்ட வைத்திய அதிகாரியான டாக்டர் டபிள்யூ. டி. எல். பெரேரா நடத்திய புதிய பிரேத பரிசோதனையில், பொல்லினால் அடித்ததன் விளைவாகவே மஹதூன் இறந்ததாக அவர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

விசாரணையின் பின்னர் போதிய சாட்சியமில்லாத காரணத்தால் நான்காம் எதிரியை திரு. கொலின் மெண்டிஸ் விடுதலை செய்தார்.

## ரயிலில் மரணம்

யாழ்ப்பாணம், சனி

தனது தங்கையுடனும், மச்சானுடனும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு புகையிரதமூலம் வந்த ஒருவர் புகையிரத பெட்டிக்குள்ளேயே மரணமானார், இந்தப் பரிதாப சம்பவம் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

மரணமானபுங்குடுதீவைச் சேர்ந்த இராமநாதனின் [51 வயது] மரணம் சம்பந்தாக மரணவிசாரணை அதிகாரி திரு. நா. இராசநாயகம் விசாரணை நடத்தினார். மரணமானவர் பலாங்கொடையில் ஆசிரியராகக் கடமையாற்றுவதாகவும் அண்மையில் கடுமையான சுகவீனத்தில் ஒரு மாத லீவில் விங்குடுதீவில் வந்து தங்கிவிட்டு பலாங்கொடைக்குத் திரும்பிச் சென்றதாகவும், பின்னர் தனக்கு சுகமில்லைஎன்று இவர் சகோதரிக்குத் தந்தி அனுப்பியதைத் தொடர்ந்தே சகோதரியும், கணவரும் அங்கு சென்று மரணதானவரை புகையிரத மரணவிசாரணை அதிகாரி மூலம் அழைத்துக்கொண்டு வந்தபோது அவர் மரணமானதாகவும் மரணவிசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

இறந்தவரைப் பிரேத பரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்டார். (ந. நி)

## இலங்கை மீண்டும் வெற்றி

கொழும்பு, வெள்ளி

இன்று கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற அமெரிக்க உதைபந்தாட்ட கோஷ்டிக்கும் இலங்கை கோஷ்டிக்குமிடையிலான உதைபந்தாட்ட இரண்டாவது போட்டியில் இலங்கை மீண்டும் 3—0 கோல்களால் வெற்றியீட்டியது. முதல் போட்டியிலும் இலங்கை 2—1 கோல்களால் வெற்றியீட்டியது குறிப்பிடத்தக்கது.

## வாலிபர் காயம் பெண்கள் தாக்கினராம்

யாழ்ப்பாணம், சனி

இருபெண்களால் தாக்கப்பட்டதாகச் சொல்லப்படும் வாலிபரொருவர் காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நேற்றிரவு அனுமதிக்கப்பட்டார். இச்சம்பவம் யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தில் நடைபெற்யது.

கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த அருளப்பு என்ற 26 வயது வாலிபரே தாக்கப்பட்டு காயங்களுக்குள்ளானவர். இதுசம்பந்தமாக இவர் பொலிஸில் செய்த புகாரில் நேற்று மாலை தனது வீட்டிலேயே தான் நித்திரை செய்து கொண்டிருந்ததாகவும். தனது அண்ணன் மனைவியும் அவரது தாயும் தனது வீட்டுக்கு வந்து தன்னை இரும்புக்கம்பியால் தாக்கியதாகவும் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். [ந.நி]

## 'லக்சல' குறித்து கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் உள்நாட்டு அமைச்சர் திரு. தகநாயக்காவினால் திறந்து வைக்கப்பட்ட உள் நாட்டு விற்பனவு நிலையத்துக்கு 'லக்சல' என்ற சிங்கள பெயர் சூட்டப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக யாழ்ப்பாணத்தில், 'லக்சல' எதிர்ப்பு கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில், இம்மாதம் 26-ம் திகதி மாலை திரு. பி. கோ. வெற்றி வேந்தன் தலைமையில் இக் கூட்டம் நடைபெறும்.

கொழும்பு, வெள்ளி

கொழும்பு திருக்கோணமலை கடுகதிப்பஸ் சேவையில் மேலும் இரு சேவையைச்சேர்க்க இ.போ.ச. தீர்மானித்துள்ளது. அடுத்த மாத முற்பகுதியிலிருந்து இது செயல்படும்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### ஞாயிறு 26-11-67

### இலங்கை

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல் வகை, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49. மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 குரல் வகை,

இரவு 6-15 கோட்டு வாத்தியம், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பாவளம், 7-30 பாட்டு - கமலாம்பிகை கந்தசாமி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு-வி. சிவசுப்பிரமணியம், 9-45 கலைக்கோலம், 10-15 தேர்ந்த இசை.

### சென்னை - 1

காலை 6-00 - வந்தேமாதரம், 6-05- துதிப்பாடல்கள் 6-30 நிகழ்ச்சிக்குறிப்புகள், 6-35 அருள்வாக்கு, 6-50 வள்ளுவர் வாய்மொழி, 6-55 வாத்திய இசை, 7-15 தமிழில் செய்தி, 7-30 திரைகானம், 8-00 மெல்லிசை, 8-15 பாட்டு, 9-15 சித்திர அரங்கம். 9-30 பாதுகா பட்டாபிஷேகம், 10-30 மதுரகீதம், 11-55 பிராந்தியச் செய்திகள்.

பகல் 12-00 பாட்டு, 12.30 சூரியகாந்தி, 1-00 வீணை, 1-30 வாத்தியக் கோஷ்டி, 1-45 திரைகானம், 2-00 தமிழில் செய்தி. 2-10 பாப்பாமலர்.

மாலை 3-00 நேயர் விருப்பம், 3-30 இருநாடகங்கள், 4-30 பாட்டு, 5-30 வீணை.

இரவு 6-00 நாட்டு நடப்பு, 6-05 பிராந்தியச் செய்திகள், 6-30 வாத்திய இசை, 6-45 திரைகானம், 7-15 தமிழில் செய்திகள், 7-30 நம்விவசாயிகளுக்கு, 8-00 வளமைக்குவழி, 9-00 ஆங்கிலத்தில் செய்தி, 9-15 மக்கள் மேடை சித்திரம், 9-30 இலக்கிய உபந்நியாசம், 10-00 திரைகானம், 10-30 பாட்டு.

### திருச்சி - 1

காலை 6-30 வந்தேமாதரம், 6-40 ஆங்கிலத்தில் செய்தி, 6-45 நிகழ்ச்சிக்குறிப்புகள், 6-50பக்திப்பாடல், 6-55 அறஉரை, 7-00 துதிப்பாடல்கள், 7-15 தமிழில் செய்தி, 7-30 மீண்டும் கேட்போம், 8-00 ஆங்கிலத்தில் செய்தி, 8-15 பாட்டு, 9-15 மணிமலர், 11-55 பிராந்தியச் செய்திகள்.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூர்யகாந்தி, 1-00 பெண்ணுலகம், 1-30 ஆங்கிலத்தில் செய்தி, 1-50 இசைமஞ்சரி, 2-00 தமிழில் செய்தி.

மாலை 3-30 இருநாடகங்கள், 4-30 விருதுநகர், 5-30 மெல்லிசைக் கதம்பம்.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-25 சிறுவர் அரங்கம், 6-45 கிராமியக்கலை, 7-15 தமிழில் செய்தி, 7-30 விவசாயிகளுக்கான நிகழ்ச்சி, 8-00 திரைப்படஇசை, 8-30 பாட்டு, 9-00 ஆங்கிலத்தில் செய்தி, 9-15 செய்தி அரங்கம், 9-30 இலக்கிய உபந்நியாசம் 10-30 ஆங்கிலத்தில் செய்தி.

## காலியில் கொலை 10 வாலிபர் ரிமாண்டில்

காலி, சனி

ஹபரடுவ பொலிஸ் பிரிவைச் சேர்ந்த கடுருப்பே என்னுமிடத்தைச் சேர்ந்த 53 வயதான வில்பேர்ட் சமரவிக்கிரமவின் மரணத்தைஒட்டி காலி மரண விசாரணை அதிகாரி திரு, றெக்ஸ் விக்கிரமசிங்க, ஸ்தலத்திலேயே விசாரணை நடத்தினார்.

விசாரணையின் போது, இறந்தவரைக்கொலைசெய்த குற்றத்தில், ஆறு இளைஞர்களை இன்ஸ்பெக்டர் ஜோன் ஜயசிங்க ஆஜிர்செய்தார். அவர்களை 27-ந் திகதிவரை ரிமாண்டில் வைக்குமாறு அதிகாரி உத்தரவிட்டார். மற்றும் நால்வருக்கு வாரண்ட் பிறப்பித்தார்.

இந்த நால்வரும் பின்னர் பொலீசில் சரணடைந்தனர்.

## "விரைவில் மின்சாரம் கிடைக்கும்"

உடுப்பிட்டி, சனி

"உடுப்பிட்டிக் கிராமசபையின் 24 வட்டாரங்களுக்கும் விரைவில் மின்சாரம் கிடைத்துவிடும். இதற்கான பூர்வாங்க வேலைகளில் நான் துரிதமாக இறங்கியுள்ளேன்" என்று உடுப்பிட்டிக் கிராமசபைத் தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் தெரிவித்தார்.

கிராமசபையின் அடுத்த வருடத்திற்கான உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் மின்சாரத்திற்கென அடையாள மான்யமான ரூபா 10,000 ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், உள்ளூராட்சி அமைச்சருடனும் இதுசம்பந்தமாக நடத்திய பேச்சுவார்த்தைகள் பயனளித்துள்ளதாகவும், மின்சார விநியோகத்திற்கு உடுப்பிட்டிக்கிராமசபைக்குக் கடன் வழங்கும் பத்திரத்தில் கையொப்பமிட அரசாங்க அக்கௌண்டன் தயங்குவதாலேயே தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், இதுவிடயமாக உடன்நடவடிக்கை எடுக்குமாறு உதவி உள்ளூராட்சி ஆணையாளர் மேலதிகாரிகட்கு அறிவித்துள்ளதாகவும் விரைவில் அமைச்சரின் அனுமதி கிடைத்துவிடுமென்றும் திரு. தர்மரத்தினம் கூறினார். அரசாங்கத்திடமிருந்து பெறும் கடன் பணத்தைக் கிராமசபையின்வருமானமூலம் சொற்பகாலத்தில் தீர்த்துவிடச் சம்மதித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## சிரமதானம்

சங்கானை, சனி

சங்கானை பட்டினசபை எல்லைக்குள் ஏழாம் கட்டையடியில் மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட நீர்த்தேக்கத்தினால்சீர்கேடடைந்திருந்தமதகையும்வடிவாய்க்காலையும் சங்கானை இளைஞர்கள் சிரமதானம்மூலம் வெட்டி சுத்தம் செய்தனர்.

ஆசிரியர்கள் திரு. கார்த்திகேசு, திரு. வல்லிபுரம் ஆகியோரின் தலைமையில் இச் சிரமதானம்நடைபெற்றது.

## வெள்ளப் பெருக்கு

சென்ற ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் போது உடைந்த குளம் ஒன்று கஞ்சிமடம் என்னும் இடத்தில் பழுதுபார்க்கப்படாமல் இன்றுவரை இருப்பதால் நேற்றிரவு இங்கு பெய்த கடும்மழையின் காரணமாக இந்த இடத்தில் பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் போக்குவரத்துக்கள் தடைபடுகிறது.

## "செலாவணி வழங்குக"

வெள்ளவத்தை, சனி

வரும் ஜனவரி 3-ம் திகதி சென்னை உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டைக் காணவிரும்புகின்ற சகல மக்களுக்கும் அந்தக்கால இடைவெளியில் அந்நியச் செலாவணி வழங்கும்படி கோரும் மகஜரொன்றை வெள்ளவத்தைத் தமிழ் மன்றத்தின் சார்பில் அதன் செயலாளர் திரு. க. பேரம்பலம் அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

## "வேதனை; வெட்கக்கேடு"

உடுப்பிட்டி, சனி

"ஆயுள்வேதமும், ஹோமியோபதியும் கற்றவர்கள் தாம் கற்றுத் தேர்ந்த வைத்திய முறையைக் கையாளாது அலோபதி [ஆங்கில] வைத்திய முறையைப் பின்பற்றுவது வேதனைக்குரியதும வெட்கக் கோடானதுமாகும்" என்று டாக்டர் ஆ. திருச்சிற்றம்பலம் கரணவாயில் நடைபெற்ற வடமராட்சி ஹோமியோபயோ கெமிஸ்ட்ரி பட்டதாரிகள் சங்கக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

## தே நீர் விலைஉயர்வு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண நகரிலுள்ள பல கடைகளில் நேற்று முதல் பால் கலந்த தே நீர் 15 சதமாகவும், வெறும் தேநீர் 8சதமாகவும்விற்கப்பட்டு வருகின்றது. நேற்று முதல் சீனிக்கு 5 சதம் விலையுயர்த்தப் பட்டதாகவும், பால்மாவுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளதாலேயே தேநீர் விலையுயர்த்தப் பட்டுள்ளதாக கடை உரிமையாளர்கள் தெரிவித்தார்கள்.

[ந. நி]

## கெனடி நினைவு விழா

சுழிபுரம், சனி

பனிப்புலம் அம்பாள் சனசமூக நிலையத்தில் காலஞ்சென்ற அமெரிக்கஜனாதிபதி ஜோன். எப். கெனடி நினைவுதினம் கொண்டாடப்பட்டது, சங்கத் தலைவரின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கெனடியின் படம் திரைநீக்கம்செய்யப்பட்டது, கெனடியின்சேவையைப்பற்றி திரு. ச. குமாரசிங்கம், திரு. ஆ. வரதராசா, திரு. த. தவரசாசிங்கம், திரு. க. கனகரத்தினம், திரு. வே. தேவராசா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

## திருக்கேதீச்சரம்

கொழும்பு, சனி

தென்மராட்சிப் பக்தர்கள் சாவகச்சேரி முன்னாள் எம். பி திரு. வி. குமாரசாமி தலைமையில் திருக்கேதீசரத்தில் இம்மாதம் 27-ம் திகதி சோமவாரம் கொண்டாடச் செல்கிறார்கள்.

டிசம்பர் 4-ம்திகதிவலிகாமம்வடக்கு பக்தர்கள் திருக்கேதிஸ்வரத்தில் சோமவாரம்கொண்டாடுவார்கள்.

## ஆயிரத்துக்கதிக

1-ம் பக்கத் தொடர்ச்சி

கள் தமக்கு வேண்டியதை உற்பத்திசெய்வது மல்லாது நம் நாடுகட்கும் ஏற்றுமதி செய்கின்றன. எமது உணவை நாம் தேடிக்கொள்ளாது பிறநாட்டை நம்பி வாழ்வது ஓர் வாழ்வாகுமா? இந்த இழிவுநிலையைப் போக்க யாவரும் நன்கு முயலவேண்டும்' என்றார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org